பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 27 செவ்வாய்க்கிழமை (12-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:257

# யாழ். - கொழும்பு ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க அரசு திட்டம்!

## சீனாவில் வைத்து பிரதமர் ரணில் அறிவிப்பு

- பெய்ஜிங்கிலிருந்து ஞா.குகநாதன் -

பெய்ஜிங்,ஓகஸ்ட்12

**யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் மீண்டும் விரைவில் ரயில் சேவை ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. யாழ். ரயில் சேவை ஆரம்பிக்கப்படு வதற்காக ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பெய்ஜிங்கில் தெரிவித்தார்.**

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் கெரிசென்ரர் ஹோட்டலில் வர்த்தகக் கருத்தரங்கை ஆரம்பிக்கும் நிகழ்வில் உரையாற்றினார். அப்போது யாழ் - கொழும்பு இடையே ரயில்பாதை அமைக்கும் திட்டம் குறித்துத் தெரிவித்தார்.

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட சீன வர்த்தகர் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளித்த பிரதமர் ரணில் அதனைக் கூறினார்.

2000ஆம் ஆண்டில் தமது நிறுவனம் இலங்கையில் ரயில்வே புனரமைப்புக்காக கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தது எனவும் இதுவரை அது தொடர்பாக பதில் ஏதும் கிடைக்காதது ஏன் எனவும் அந்த வர்த்தகர் வினாவினார்.

அதற்குப் பதில் அளித்த பிரதமர் கூறியதாவது:-

ரயில் சேவையைச் சீரமைக்க ரயில்வே அதிகார சபை உருவாக்கப்படுகின்றது. அந்தச் சபை இயங்க ஆரம்பித்ததும், பழைய ரயில் என்ஜின்கள் பழைய இரும்புக்கு விற்பனை செய்யப்படும் ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான கொழும்பு மற்றும் பிற இடங்களில் உள்ள நிலங்கள் குத்தகைக்கு வழங்கப்படும். அதன் மூலம் கிடைக்கும் நிதியில் இருந்து யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில்

(16ஆம் பக்கம் பார்க்க)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பெய்ஜிங் மகாமண்டபத்தில் சீனப் பிரதமர் வன்ஜியாபா வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## காணி அமைச்சர் ராஜிதவின் யாழ். விஜயம் நேற்று ரத்து

யாழ்ப்பாணம்,ஓக.12

நேற்று யாழ்ப்பாணம் வரவிருந்த காணி அமைச்சர் ராஜித சேனாரட்ணவின் பயணம் திடீரென்று ரத்தானது. காணி அமைச்சரின் யாழ். விஜயம் ரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆயினும், நேற்றுமுன்தினம் யாழ். வந்த உள்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க எதிர்நோக்க நேரிட்டதாகக் கூறப்படும் எதிர்ப்புகளுக்கும், காணி அமைச்சரின் விஜயம் ரத்தானமைக்கும் தொடர்பிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அமைச்சர் ஜோன் அமரதுங்கவின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் சில தினங்களில் சட்ட ஆராய்வுக்கு பரீஸ் செல்வார்

கொழும்பு,ஓக.12

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்னும் ஒரு சில தினங்களில் பரீஸ் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு, புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவில் புலிகள் சில திருத்தங்களைச் செய்துள்ளனர். இத்திருத்தங்கள் தொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கவே தமிழ்ச்செல்வன் பரீஸ் செல்கிறார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு தொடர்பாக ஆராய வெளிநாடுகளிலுள்ள பல சட்ட வல்லுநர்கள் பரீஸ் வரவுள்ளனர். இச் சட்ட வல்லுநர் குழுவுக்கு அமெரிக்காவிலுள்ள சட்ட வல்லுநர் வி.ருத்ரகுமார் தலைமை தாங்குகின்றார்.

பரீஸ் பேச்சுக்களில் பூர்த்திசெய்யப்படும் வரைவுடன் தமிழ்ச்செல்வன் இலங்கை திரும்புவார். பின்னர் புலிகளின் யோசனைகள் அரசுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

(ஒ-9)

## நாணய நிதியப் பிரதிநிதி நேற்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்

வவுனியா,ஓக.12

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜெலமி கார்ட்டர் நேற்று சந்தித்துப் பேசினார். இச் சந்திப்பு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஜெலமி, இங்கிருந்து நேற்று முற்பகல் தரை வழியாக கிளிநொச்சி சென்றார். அங்கு அரசியல்துறை நடுவப்பணியகத்தில் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர் சந்தித்தார். முற்பகல் 11.30 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

சமகால அரசியல் நிலை, சமா

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரதமர்—சீனப் பிரதமர் நேற்று சந்தித்து விரிவான பேச்சு

பெய்ஜிங்,ஓக.12

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீனப் பிரதமர் வன்ஜியாபா நேற்று மாலை குதூகல வரவேற்பு அளித்தார்.

பெய்ஜிங் மகாமண்டபத்துக்கு (GREAT HALL) வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கைலாகு கொடுத்து சீனப் பிரதமர் வரவேற்றார். இலங்கைப் பிரதமருடன் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மற்றும் பிரதி அமைச்சர் சஜித் பிரேமதாஸ, பெருந்தோட்ட அமைச்சர் லஷ்மன் கிரியல்ல ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கைப் பிரதமரை வரவேற்று சீனப் பிரதமர், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால தொடர்புகளை நினைவூட்டி உரையாற்றினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் விருத்தியடைய இலங்கைப் பிரதமரின் சீன விஜயம் உதவும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் சொன்னார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, பொருளாதார தொடர்புகள் விருத்தியடைவதற்கு புதிய உற்சாகத்துடன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது

(16ஆம் பக்கம் பார்க்க)

## நைஜீரிய யுவதிகள் மன்னாரில் கைது!

மன்னார்,ஓக.12

மன்னாரில் சந்தேகத்துக்கிடமான முறையில் தங்கியிருந்த நைஜீரிய யுவதிகள் இருவர் நேற்று பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

ஓஸ்ஸே ஈவ்லின் (வயது-21), டயோனா ஓமிஜி (வயது-22) ஆகிய இரு யுவதிகளே கைதுசெய்யப்பட்டு மன்னார் பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டவர்களாவர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## விவாதப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி முதலாமிடம்

கொழும்பு,ஓக.12

கொழும்பு இந்துக் கல்லூரி அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடத்திய விவாதப் போட்டியன் வெற்றிக் கிண்ணத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சுவீகரித்துக்கொண்டது.

நேற்று இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடத்தப்பட்ட "இயற்தமிழ்

(16ஆம் பக்கம் பார்க்க)

## குரங்குபாஞ்சான் முகாம் குறித்து ஆராய சொல்ஹெய்ம் இன்று வருகை

கொழும்பு,ஓக.12

நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் இன்று மீண்டும் இலங்கை வருகிறார். விடுதலைப் புலிகளின் சர்ச்சைக்குரிய குரங்குபாஞ்சான் முகாம் குறித்து இலங்கை அரசுடனும் கண்காணிப்புக்குழுவினருடனும் பேச்சு நடத்துவதே அவரது இந்த விஜயத்தின் நோக்கமாகும்

நான்கு நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கும் சொல்ஹெய்ம், கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்துவார். புலிகளுடன் நடத்தும் பேச்சுக்களின் பின்னர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் யாழ். இந்துவுக்கு சிறப்புப்பெறுபேறு

யாழ்ப்பாணம்,ஓக.12

கடந்த ஏப்ரலில் இடம்பெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் யாழ். இந்துக் கல்லூரி சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் கணிதப்பிரிவில் செல்லையா ஐங்கரன், ஸ்ரீ விக்கிரமராஜசிங்கம் சசியந்தன் ஆகியோர் 3ஏ சித்திபெற்று மாவட்ட மட்டத்தில் முறையே முதலாம், இரண்டாம் நிலைகளைப் பெற்றுள்ளனர். இதேவேளை, உயிரியல் பிரிவில் துரைராஜா ரஜீவன் 3ஏ சித்திபெற்று மாவட்ட மட்டத்தில் முதல் நிலையில் உள்ளார். இப்பாடசாலையில் 9 பேர் 3ஏ சித்தி பெற்றுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)



# கதிர்காமத்தில் இன்று தீர்த்தம்: மீண்டும் அங்கு தமிழ் ஒலிக்கிறது!

காரைதீவு,ஓக.12

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர் காமம் முருகன் ஆலய தீர்த்தோற் சவம் இன்று நண்பகல் 12 மணிய ளவில் மாணிக்க கங்கையில் நடை பெறும். தீர்த்தோற்சவத்துக்காக லட் சக்கணக்கான பக்தர்கள் கதிர்காமத் தில் திரண்டுள்ளனர்.

கதிர்காம நகரிலுள்ள அனைத்து விடுதிகளும் நிரம்பி வழிகின்றன. நாடெங்கிலுமிருந்து குறிப்பாக வடக்கு - கிழக்கு, மலையகம் ஆகிய பகுதி களிலிருந்து லட்சத்திற்கும் மேற் பட்ட தமிழ் மக்கள் கதிர்காமத்திற்கு வந்துள்ளனர்.

ஆலய சூழலிலும், மாணிக்க கங் கையின் சூழலிலும் சுமார் 50 ஆயி ரம் மக்கள் மரங்களின் கீழ் தங்கி யுள்ளனர். இம்முறை யால காட்டுப் பாதையினூடாக கால் நடையாக வந்த யாத்திரிகர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் தாண்டியிருப்பதா கத் தெரிகிறது.

இம்முறை சகல அறிவிப்புகளும், பாடல்களும் தமிழிலே ஒலிபரப்பாகி வருகிறது. இலங்கை ஒலிபரப்புப் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட் டுத்தாபனம் என்பன கதிர்காம ஆலய, கதிரமலை ஆலய முன்றில்களில் நேரடி அஞ்சல் நிகழ்ச்சிகளை தொடர்ச் சியாக நடத்துகின்றன. பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் அனைத்தும் இரு மொழிகளிலும் உள்ளன.

இரவு 8.15 மணிவரை நீண்ட பெரஹரா ஆலய முன்றிலிலுள்ள பாரிய வெளியில் பக்திப்பரவச மூட் டும் வகையில் நடைபெற்று வந்தது. 21 யானைகள் அலங்கரிக்கப்பட்டு இப் பெரஹராவில் கலந்துகொண்டன. ஆல யச் சூழலிலுள்ள மரங்களில் 10 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட பல வர்ண மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால், ஆலயப் பிரதேசம் ஜெக ஜோதியாகக் காட்சியளிக்கின்றது.

ஆலய முன்றிலிலுள்ள மரநிழலில் உலக ஆன்மீக எழுச்சிப்பேரணியினர் "சிவாயநம" என்ற சுலோகத்தை எழுப் பிக்கொண்டிருக்கிறார்கள்.

தீ மிதிப்பு வைபவத்தில் நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றனர். அங்கப் பிரதட்சணத்தில் பெண்களும் இணைந் தனர்.

செல்லக்கதிர்காமத்திலுள்ள கங்கை இம்முறை பக்தர்கள் மத்தி யில் விருப்பை ஏற்படுத்தியிருந்தது. பிள்ளையார் ஆலயத்தில் சனக்கூட்டம் அதிகம். பொங்கிப் படைப்பதில் மக் கள் முண்டியடிக்கின்றனர்.

(ஓ)

## முதல்வரின் அலுவலகத்தில் தீ!

கொழும்பு,ஓக.12

அநுராதபுரத்திலுள்ள வடமத்திய மாகாண சபை முதலமைச்சரின் அலுவலகம், பிரதான செயலகம் அமைந்துள்ள கட்டடம் நேற்றுக் காலை தீப்பிடித்துக் கொண்டது. ஆயினும் ஊழியர்களின் முயற்சியி னால் தீ பரவுவதற்கு முன்னரே அணைக்கப்பட்டுவிட்டது. மின்சார ஒழுக்கு காரணமாக காலை 10.30 மணியளவில் கட்டடத்தில் தீப்பிடித் துக் கொண்டது. உடனே தீயணைக் கும் படையினரையும் பொலீஸாரை யும் அழைத்த ஊழியர்கள் தீயை அணைப்பதிலும் ஈடுபட்டனர்.

## கைதிகளிடையே மோதல்!

சிறைச்சாலையில் இருந்து விசா ரணைக்காக நீதிமன்றத்துக்குக் கூட்டி வரப்பட்ட பாதாள உலகக்கும்பலைச் சேர்ந்த இருவர் நீதிமன்றக் கட்டடத் துக்குள் மோதிக்கொண்டனர். இத னால் நான்கு சிறைக் கைதிகள் வெட் டுக் காயங்களுடன் கொழும்பு வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வெலிக் கடைச் சிறைச்சாலையிலிருந்து கொழும்பு நீதிவான் முன் ஆஜர் செய் யப்பட இவ்விரு கைதிகளும் கூட்டி வரப்பட்டனர்.

கைதியொருவர் மறைத்து வைத்தி ருந்த பிளேட் ஒன்றினால் சக கைதி களைத் தாறுமாறாக வெட்டினார் எனத் தெரிகிறது.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டி ருந்த ஒரு கைதி எவ்வாறு பிளேட் வைத்திருக்கமுடிந்தது என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வரு கிறது.

# சமாதான முயற்சி பின்னடைவுக்கு மத்தியிலும் புதிய உத்வேகத்துடன் முன்னேறுவோம்

## சீன வர்த்தக சம்மேளன கூட்டத்தில் பிரதமர் ரணில் உரை

கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையைப் பாதித்த மோதல்கள், கடந்த காலங்களில் கடைப்பிடித்த வழிதவறிய பொருளாதாரக் கொள் கைகள் ஆகியவை காரணமாக நாம் வர்த்தகத்தில் பெருமளவை இழந்தோம். அதிர்ஷ்டவசமாக இன்று போர் நிறுத்தத்தை அடைந்திருக்கிறோம். கடந்த இருபது மாதங்களாக அது நீடிக்கிறது. சமீபத்திய பின்னடைவு களுக்கு மத்தியிலும் புதிய உத் வேகத்துடன் விரைவில் தொடர்ந்து முன்னேறுவதை எதிர்பார்க்கின்றோம்.

சீன விஜயத்தை மேற்கொண்டி ருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் பெய்ஜிங்கில் சீன வர்த்தக சம்மேளனத்தின் கூட்டத் தில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடை யிலான கலாசார, வர்த்தக உறவு களை விவரித்துக் கூறிய பிரதமர் ரணில், நீண்ட காலமாக காத்திருக் கும் சமாதானத்துக்கும் மத்தியில், மிகப்பரந்த பொருளாதாரக் கொள் கையை நாம் உருவாக்குகின்றோம் எனவும் சொன்னார்.

இலங்கைக்கும் சீனாவுக்குமிடை யிலான வர்த்தகம், உல்லாசப் பயணத் துறை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் ஆறு சீன நிறுவனங்க ளின் பிரதிநிதிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை பேச்சு நடத்தினார்.

காலை 9.30 மணிக்கு கெரிசென்ரர் ஹோட்டலை வந்தடைந்த பிரதமரை சீன வர்த்தகத்துறை அமைச்சர் வர வேற்றார்.


அதையடுத்து சீனாவில் இயங்கும் பாரிய ஆறு நிறுவனங்களின் பிரதி நிதிகளுடன் பிரதமர் பேச்சு நடத் தினார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் கலந்துரையாடிய பிரதமர் பின்னர் வர்த்தகக் கருத்தரங்கை முற்பகல் 11 மணிக்கு மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இந்தக் கருத்தரங்கில் 200 சீன வர்த்தகப் பிரமுகர்கள் கலந்துகொண் டனர். சீன வெளிநாட்டு முதலீட்டு அபி விருத்திச் சபைத் தலைவர் வான் ஜிப்ஹி வரவேற்புரை நிகழ்த்தினார்

சீன வர்த்தக அமைச்சர் யூ குஹங்கோ பேசுகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விஜயத்து டன் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடை யிலான உறவு மேலும் விரிவடை யும் என்றார். இதையடுத்து பிரதமர் உரை நிகழ்த்தினார். பிரதமரின் உரை சீன மொழியில் மொழி பெயர்க் கப்பட்டது. கரகோஷம் செய்து பிரத மரின் உரையை சீன வர்த்தகர்கள் வரவேற்றனர்.

# 20 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் 3 நாள்கள்.....



**ஐரோப்பாவில் இப்போது கோடை விடுமுறைக்காலம். இதனால் அங்கி ருந்து தமது தாயகத்தைப் பார்ப்பதற்கு என வரும் மக்களின் எண்ணிக்கை அதிகளவில் இருக்கின்றது. அவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் வந்து தங்கிய குடும்பம் ஒன்றின் அனுபவங்களை பி.பி.ஸி. உலக சேவையின் கொழும்புச் செய்தியாளர் விவரணப் படமாகத் தயாரித்து வெளியிட்டுள்ளார். நேற்றுக் காலை பி.பி.ஸி. தொலைக்காட்சி சேவையில் (ஆங்கிலம்) இந்த விவரணப்படம் ஒளிபரப்பப்பட்டது. அது தொடர்பான செய்தி அறிக்கை ஒன்று பி.பி.ஸி. இணையத் தளத்திலும் வெளியிட்டுள்ளார். அதன் தமிழ் வடிவம் இது.**

தெற்கு இங்கிலாந்தின் ருய்சிலிப் என்ற இடத்தில் வசிக்கும் பாலராஜா குடும்பத்துக்கு இம்முறை கோடை விடுமுறை - மூன்று நாள்கள் - வித்தி யாசமானது. அவர்கள் அதனை முன் னாள் போர்ப் பிரதேசமான வடக்கு ஸ்ரீலங்காவில் கழித்தார்கள்.

"பல ஆண்டுகளின் பின்னர் நாம் திரும்பிப் போகின்றோம். அது எங்க ளுக்கு பெரும் ஆச்சரியத்தைத் தரப் போகின்றது. ஆனால், அதிர்ச்சியான தாக இருக்காது என்றே நினைக் கின்றேன்" - இவ்வாறு தெரிவித்தார் 53 வயதான ஆதித்தபிள்ளை ஆனந்த ராஜா. இங்கிலாந்தின் 'ரெஸ்கோ' வர்த்தகத் தொகுதியில் களஞ்சிய முகாமையாளராக இருக்கின்றார் இவர்.

ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற இரு தசாப்த காலப் போரினால் நாட்டை விட்டு வெளியேறிய 10 லட்சத்துக்கு மேற்பட்டவர்களில் அவரும் ஒருவர். அவர்களில் சிலர் இப்போதுதான் முதற் றடவையாகத் திரும்பிப் போகின்றார் கள். தமது கடந்த காலங்களை மீள நினைவுபடுத்திப் பார்ப்பதற்கு போர் நிறுத்த ஒப்பந்தம் அவர்களுக்கு வசதி களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

பாலராஜாவின் உறவினர்கள் ஸ்ரீ லங்காவில் இருக்கின்றனர். யாழ்ப் பாணத்தில்தான் எதனை எதிர்பார்க் கின்றார் என்பது பாலராஜாவுக்கு விளங்கியிருக்கவில்லை.

பாலராஜாவின் குழந்தைப் பருவ வீட்டை நோக்கி அவர்கள் சென்று கொண்டிருக்கின்றனர். உள்ளூர் குழந்தைகள் பூங்கா மற்றும் நூல் நிலையம் அடுத்து தனது மாமாவின் கண்களைக் குருடாக்கிய குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற வீடு என்ப வற்றை அவர் அவற்றின் இடத்தில் சுட்டிக்காட்டுகின்றார்.

தன்னுடைய சொந்த வீட்டை அண்மிக்கும்போது உணர்ச்சிவசப்படு வது அதிகரித்தபடி இருந்த அவர் "அது அழிந்து போனதாக இதுவரை யிலும் நாம் அறிந்திருக்கவில்லை" - என்றார்.

பாலராஜா ஓர் அதிர்ஷ்டசாலி. அவரது வீடு இன்னும் இருந்தது. சன்னங்களின் தாக்குதலுக்கு உள் ளான அடையாளங்களால் சூழப்பட்டு கிடந்தது.

தொடர்ந்த உள்நாட்டுப் போரு டன் கூடவே இருந்த சாட்சிகளினால் முற்றிலும் புதிய ஒருவராக பால ராஜா வரவேற்கப்பட்டார்.

அவர்கள் தமது லண்டன் விருந் தினர்களை வரவேற்றார்கள். விரை வில் அவரது உறவினர்கள் கண்ணீ ருடன் அவரைத் தழுவிக் கொண்டனர். அவரது பால்ய வயது நண்பர்களை மீண்டும் சந்திப்போம் என கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

அவர்களது மீள்வருகை குறித்து சிரிப்பும் அழுகையும் அந்தக் குடும் பத்தைத் தொற்றிக்கொண்டது.

"பல வருடங்களுக்குப் பின்னர் பார்க்கும்போது அனைத்தும் வித்தியா சமாகத் தெரிகின்றன" - என்கிறார் பாலராஜா. நெற்களைக் காயப்போடு வதற்காக தமது பாட்டனார் மலேஷி யாவில் இருந்து இறக்குமதி செய்து பதித்த மாபிள் தரைக்கற்கள் குறித்து அவரது சகோதரி நினைவுகளை மீட்டபோது அவர் இப்படிச் சொன் னார்.

**பிரான்ஸிஸ் ஹரிஸன்**
**(பி.பி.ஸி. உலக சேவை)**
**தமிழில் : பிரேம்**

பாலராஜாவின் மனைவி விஜய குமாரி அதிர்ஷ்டமற்றவராக இருந் தார்.

கண்களில் கண்ணீர்மல்க தனது கைகளால் வாயைப் பொத்தியபடி "ஓ மை காட்" என்று மீண்டும் மீண் டும் சொல்லியபடி இருந்தார்.

அவர் பிறந்து வளர்ந்த வீட்டில் அவரது சிறிய வயதில் இருந்த தோட்டத்தை இப்போது அவரால் நினைவுபடுத்த முடியவில்லை.

பாலராஜா சொன்னார், "நான் உணர்ச்சிவசப்படுகிறேன். எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன மாற் றங்கள் ஏற்பட்டுள்ளன. நான் இதனை எதிர்பார்க்கவேயில்லை" - என்று.

பெற்றோர் தமது உணர்ச்சிகளுக் குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்க அவர்களது 15 வயது மகள் ஷர்மிலி - பிரிட்டனில் பிறந்தவள்- யாழ்ப்பா ணத்துடன் உறவாட முடியாமல் சிக் கல்பட்டுக் கொண்டிருந்தார்.

"நான் குழப்பமாக உணர்கின்றேன். எதனையும் நான் முன்பு பார்த்திருக்க வில்லை. எந்தப் பழைய வீடும் பழக்க மற்றவர்களின் வீடாகவே இருக்கின் றது" - என்றார் ஷர்மிலி.

அவர்களுக்கு சில ஆறுதல்களும் இருந்தன.

திருமதி பாலராஜா தனது சகோ தரி வீட்டில் இருந்து (அடுத்த வீடு) தான் இங்கிலாந்து செலவதற்கு முன் னர் பொதி செய்து வைத்து விட்டுச் சென்ற பொருள்களைக் கண் டெடுத்தார். அவர் கற்பனைகூடச் செய்துபார்த்திருக்கவில்லை, 20 வரு டங்களின் முன்னர் வைத்தவற்றை தான் மீண்டும் தூசுகளுக்குள் இருந்து பெறுவோம் என்று.

"நான் மகிழ்கிறேன். அவை அங்கேயே இருந்ததற்காக" என்று கூறி பெரு மகிழ்ச்சியுடன் சிரிக்கிறார்.

குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறி, சில உடைந்த மரத் தளபாடங்கள் இவற்றையெல்லாம் விட முக்கியமாக பழைய புகைப்பட 'அல்பம்' என்பவற்றை அவர் அந்த தூசுபடிந்த அறைக்குள் இருந்து கண்டெடுத்தார்.



"அவர்கள் (பெற் றோர்) குழந்தைகளாக எப்படி இருந்தார்கள் என்பதை நாம் ஒரு போதுமே பார்த்த தில்லை. இனியும் நாம் அப்படி அவர்களைப் பார்க்காமல் இருக்க வேண்டியதில்லை" - என்றார் சர்மிலி. இள மைக் காலத்தில் தனது தாயாரின் கன் னங்கள் உருளைக் கிழங்கை ஒத்ததாக - சிவப் பாகவும் ரோஸாகவும் - இருந்ததாக அவர் எண்ணுகின்றார்.

திருமணம் முடித்த புதிதில் பால ராஜா தனது மனைவிக்கு எழுதிய காதல் கடிதம் கண்டெடுக்கப்பட்ட போது குதூகல ஒலி கூரையைப் பிளந் தது.

"என் இனிய அன்பே" என்று தொடங்கும் அந்தக் கடிதத்தை ஏனை யவர்கள் வாசிப்பதற்கு முன்னர் பால ராஜா அதனைப் பறித்துவிட்டார்.

### தலைமுறை இடைவெளி

சில பிரச்சினைகளை ஷர்மிலியும் அவரது 12 வயது சகோதரனான சங்கரும் எதிர்கொள்கின்றனர். சங் கரிடம் ஒரு நீண்ட முறைப்பாட்டுப் பட்டியலே இருக்கின்றது. சோர்வு, வெப்பம், நுளம்புத் தொல்லை, மோச மான வீதிகள், நல்ல குளியலறை கள் இல்லாமை என்பன அவர்களுக் குப் பிரச்சினைகளாகவுள்ளன. அவற்றைவிட இன்னும் குறிப்பிடத் தக்க சில பிரச்சினைகளும் இருக் கின்றன.

அங்குள்ள வீடுகளின் தராதரம் அந்தக் குழந்தைகளை, பிரிட்டிஷ் வீடுகள் சிறந்தவை என்று சொல்ல வைக்கின்றன.

தனது பிரிட்டிஷ் ஆடம்பர வாழ்க்கை குறித்து ஷர்மிலி பாராட்டுத் தெரி விக்கும் அதேநேரம் யாழ்ப்பாணத் தில் தான் வளராதது தனது அதிர்ஷ் டம் என்றும் அவர் நினைக்கிறார்.

சங்கரோ தமது விடுமுறையின் அடுத்த பாகமாக தாய்லாந்துக்கு எப் போது போவோம் என்று துடித்துக் கொண்டிருந்தான்.

பிரிட்டிஷ் வாழ் தமிழர்களின் இளைய தலைமுறையினால் தங்க ளைக் கவர்ந்திழுக்கக்கூடிய எதனை யும் யாழ்ப்பாணத்தில் காணமுடிய வில்லை. போர் அதற்கு ஒரு காரண மாகப் போய்விட்டது.

இந்த மூன்று நாள் விடுமுறை அவர்களில் எல்லோருக்கும் ஒரு சிறந்த நேரம் எனக் கூறமுடியாது. ஆனால் திரு. திருமதி பாலராஜாவுக்கு இந்த விடுமுறை ஒரு வாழ்க்கை. ★





ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் ஷெல் வீச்சுக்கு பதிலடி

# தென்லெபனான் எல்லைப் பகுதியில் இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீச்சு

## பொறுமை காக்கும்படி ஐ.நா. வேண்டுகோள்

ஷிலோமி,ஓக.12

இஸ்ரேலிய விமானங்கள் நேற்று முன்தினம் தென்லெபனானில் உள்ள கிராமத்தின் மீது குண்டுகளை வீசித் தாக்கியுள்ளன. கடந்த வெள்ளியன்று ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் ஷெல் வீசியதில் இஸ்ரேலில் 16 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டு, நால்வர் காயமடைந்த சம்பவத்திற்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே இஸ்ரேல், விமானங்களின் மூலம் குண்டுகளை வீசித் தாக்கியுள்ளது என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவிக்கிறது.

இதேவேளை, 22 வருடகாலமாக தென்லெபனானை ஆக்கிரமித்திருந்த இஸ்ரேல், கடந்த 2000 ஆம் ஆண்டில் தனது படைகளை மீளப்பெற்றிருந்தது.

ஆயினும், பெய்ரூட்டில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் ஹில்புல்லா அமைப்பின் போராளி கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே தாம் ஷெல் வீச்சுக்களை நடத்தினர் என்றும் - கைதிகள் விடுவிப்பு தடைப்படுமானால் மேலும் தாக்குதல்கள் தொடரும் எனவும் அந்தத் தீவிரவாத அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

மேலும் விமானம் மூலமாக குண்டு வீச்சுக்கள் நடத்தி தீவிரவாதிகளின் இடங்கள் மட்டுமே தாக்கப்பட்டதாகவும், தாக்குதல் தொடர்ந்தால் பதிலடி தொடரும் என்பதற்கான எச்சரிக்கை இது என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல், படைகளை மீளப்பெற்ற தன் பின்னர் இடம்பெற்ற முதலாவது தாக்குதல் இதுவாகும்.

தாக்குதல் பற்றி இஸ்ரேல் ஐ.நாவிடமும் முறையிட்டுள்ளதுடன் ஹிஸ்புல்லாஹ் தீவிரவாதிகளுக்கு ஆதரவு வழங்கிவரும் சிரியா, ஈரான் போன்ற நாடுகள் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளது.

இஸ்ரேலைப் பொறுமை காக்குமாறு கூறியுள்ள ஐ.நா. தீவிரவாதிகளுக்கு ஆதரவு வழங்கும் நாடுகள் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

அப்படி அவைகள் தீவிரவாதிகளை கட்டுப்படுத்தத் தவறினால் மீண்டும் தென்லெபனான் எல்லையில் பதற்றம் நிலவுவதுடன் சண்டைகள் தொடங்கவும் வாய்ப்புள்ளது என்றும் எச்சரித்துள்ளது.

அதேநேரம், தாக்குதல் தொடரும் நோக்கம் எதுவும் தனக்கில்லை என்று இஸ்ரேல் மேலும் கூறியுள்ளது.

இஸ்ரேல் விமானக் குண்டு வீச்சில் லெபனானில் உயிச்சேதம் ஏற்படவில்லை. ஏவுகணை நிலையம் ஒன்று நாசமாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்தோனேசியாவின் பாலித்தீவில் கடந்த வருடம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரியெனக் கருதப்படும் முஸ்லிம் மதத் தலைவரான இமாம் சமுத்திராவுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. தான் மரணமாவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். "அவர்களுக்கு நான் நன்ற சொல்கிறேன், எனக்கு மரணதண்டனை விதித்தமைக்காக. நான் இறந்து போனால் எனது வாழ்வு அமைதியாக இருக்கும். நான் கடவுளுக்கு அருகில் இருப்பேன்" என்றார் அவர்.

## பலஸ்தீன அகதி முகாம்மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல்

மேற்குக் கரை நகரமான நப்லஸின் அஸ்கர் என்ற இடத்தில் அமைந்துள்ள பலஸ்தீன அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் படையினர் கடந்த வெள்ளியன்று தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் முகாம் அமைந்திருந்த கட்டடத்தின் மூன்றாவது மாடி சேதம் அடைந்தது. உயிரிழப்பு பற்றிய தகவல் உடனடியாக வெளியிடப்படவில்லை.

சந்தேகநபர்கள் சிலரைக் கைது செய்வதற்காக இந்த அகதிமுகாமுக்கு இஸ்ரேலியப் படையினர் சென்றபோது பலஸ்தீனியர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதனையடுத்து, இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தினர். அவர்கள் அகதிமுகாம் கட்டடத்தின் மூன்றாவது மாடியிலிருந்து டாங்கி எதிர்ப்பு ஏவுகணையை மையமாகக் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இதனால்தான் மூன்றாவது மாடி சேதம் அடைந்தது என்று பலஸ்தீனிய வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

2000-2001 குண்டு வெடிப்பில்

## தண்டனை வழங்கப்பட்டவர்களை சவூதி அரசு மன்னித்து விடுதலை!

லண்டன்,ஓக.12

சவூதியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஏற்பட்ட பகைமையால் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தண்டனை வழங்கப்பட்டவர்கள் 7 பேர் அரச மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யபட்டுள்ளனர்.

விடுதலையானோர் கடந்த வெள்ளியன்று லண்டன் விமான நிலையத்தில் சென்று இறங்கினர். இச்சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுள் 5 பிரிட்டிஷ் பிரஜையும், ஒரு கனடா நாட்டுப் பிரஜையும், பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் அடங்குகின்றனர்.

இவர்களில் இருவருக்கு மரணதண்டனை வழங்கப்பட இருந்தது. இவர்களின் குடும்பங்கள் மன்னர் பாஹிட்டிடம் விடுத்திருந்த வேண்டுகோளின் பேரில் இவர்களுக்கு அரச மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பில் 47 வயதான பிரிட்டிஷ் வாசி கொல்லப்பட்டிருந்தார்.

ஷான்டி மைக்கேல், வில்லியம் சாம்சன் (கனடா), ஜேம்ஸ் பற்றிக் லீ, லெஸ் வோல்கர், ஜேம்ஸ் கொற்றில், பீற்றர் பிரன்டொன் ஆகியோரே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏழாவது நபரான க்ளொன் பலெட குற்றச்சாட்டு எதுவுமின்றி விடுவிக்கப்பட்டார். இவர்களின் விடுதலை பற்றி ஆச்சரியத்தைத் தெரிவித்துள்ள பிரிட்டனின் அழுத்தக் குழுவான ட்ரயல்ஸ் அட்ரோட்டின் பணிப்பாளர் ஸ்ரீபன் ஜகோபி, பெல்ஜியரான ராப்ஷெவின்ஸ் பற்றி எதுவும் தெரியவில்லை என்பதே தமது கவலை என்று தெரிவித்துள்ளார்.

## ஆப்கானில் மன்னர் ஆட்சி கோரி தனி இயக்கம் ஆரம்பம்

ஆப்கானிஸ்தானில் மீண்டும் மன்ன ராட்சியைக் கொண்டு வருவதற்காக தனி இயக்கம் ஒன்றை ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் முகமது ஜாகிர்ஷாவின் ஆதரவாளர்கள் தொடங்கியுள்ளனர்.





முன்னாள் மன்னர் ஷாவின் உறவினரான மக்மூத் காசி தலைமையில் 'தேசிய ஒருமைப்பாட்டு இயக்கம்' என்ற பெயரில் இந்த இயக்கம் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தில் சேர வரும் படி அரச குடும்பத்தினருக்கு அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

"தங்களுக்கு என்னமாதிரியான அரசாங்கம் வேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்க அனுமதி வழங்க வேண்டும். அதற்காக வாக்கெடுப்பு நடத்தவேண்டும்" என்று இந்த இயக்கத்தின் துணைத்தலைவர் ஹக்கிம் நூர்சயே கூறினார்.

இவர் ஹர்சாய் தலைமையிலான ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசாங்கத்தில் உளவுத்துறை துணைத் தலைவராக இருந்தார். இப்போது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு இந்த இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் பாதுகாப்பு பொறுப்பை வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் (நேட்டோ) ஏற்றுள்ளன. (ம)



ஈராக்கில் அமெரிக்க படைகள் மீதான கெரில்லாத் தாக்குதல் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. நேற்றும் அங்கு கூட்டுப்படையைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். கெரில்லாக்களைத் தேடி அமெரிக்கப்படையினரும் நடவடிக்கைகளை தொடர்ந்த வண்ணமே உள்ளனர்.

## இந்திய ஹெலி விபத்தில் 29 பேர் உயிரிழப்பு!

புதுடில்லி,ஓக.12

இந்தியாவில் நடைபெற்ற ஹெலிகொப்டர் விபத்தொன்றில் 29 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

இந்திய எண்ணெய் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான இந்த ஹெலிகொப்டர் அரபுக் கடலில் வீழ்ந்து மூழ்கியது எனச் செய்தியொன்று தெரிவித்தது.

விபத்து நடநத போது அதில் 29 பேர் இருந்தனர் எனவும் அவர்களில் எவரும் உயிர்பிழைக்கவில்லை எனவும் இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எண்ணெய் வளமுள்ள இடங்களைக் கண்டறியும் பணிக்காக ஹெலிகொப்டரில் அந்த ஊழியர்கள் சென்றிருந்தனர். (ம)

## ரெயிலர் பதவி விலகுகிறார்



லைபீரியாவில் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அதிபர் சார்ள்ஸ் ரெயிலர் பதவியிலிருந்து விலகிவிட்டார்.

அவர் தனது பொறுப்புக்களை நேற்று ஜி.எம்.ரி. நேரப்படி நண்பகல் 12 மணியளவில் துணை அதிபரிடம் கையளித்தார். (ம)

## இந்திய நல்லெண்ணத் தூதுக்குழு பாக்.ஜனாதிபதியை இன்று சந்திப்பு

இஸ்லாமாபாத்,ஓக.12

பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய நல்லெண்ணத் தூதுக்குழுவினர் இன்று பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே உறவு சீரடைந்து வருகின்றது.

இதற்கு எடுத்துக்காட்டாக இரு நாடுகளுக்கிடையேயான பஸ் போக்குவரத்து சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நல்லெண்ணத் தூதுக் குழுவினர் நாளை நாடு திரும்பவுள்ளனர். (ம)

## பின்லேடன் நடத்திய தாக்குதலால் வளர்ச்சி குன்றும் அமெரிக்க குழந்தைகள்

வாஷிங்ரன்,ஓக.12

கடந்த 2001இல் அமெரிக்காவின இரட்டைக் கோபுரங்கள் மீது பின்லேடன நடத்திய தாக்குதலினால் அமெரிக்காவில் வளர்சி, நிறை குறைந்த குழந்தைகள் பிறக்க வாய்ப்புள்ளது என ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

தாக்குதலினால் எழுந்த பாரிய தீ, புகை என்பன சூழலையும் வளியையும் பெருமளவு மாசுபடுத்தியது.

இந்த வளியைச் சுவாசித்த பெணகள் கர்ப்பமடைந்தால் அவர்களுக்கு நிறை குறைந்த குழந்தைகள் பிறக்க வாய்ப்பிருக்கின்றது என்று கூறப்பட்டுள்ளது.

மாசடைந்த காற்றினை சுவாசித்த 187 கர்ப்பிணிப் பெண்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே இந்த முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCS நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத்திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

DIPLOMA IN COMPUTER PROGRAMMING 12 Months

உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களின் வேலை பெறுவதற்கான உயர் தரமான மென்பொருளை உருவாக்குவதற்கான பயிற்சி

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP 6-7 Months

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 4-5 Months

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு சகல கணனிகளையும் நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

- உத்தியோகத்தர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள்,
- விரிவுரைகள் யாவும் இந்தியாவிலிருந்து வருகை தந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்
- கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- குறைந்த கட்டணம்
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்.
- Online Classes
- பெண்களுக்கென தனிப் பிரிவுகள் (Hardware Courses)

பயிற்சி ஆரம்பம் 16.08.2003

Soft View Computer College

www.arammenporulagam.com
Arammenporulagam@eth.net

43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

டேவிட்சன் 701 ஒவ்செற் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிச, சுன்னாகம். (21306)

கலர் மீன்கள், மீன் தொட்டிக்குரிய அழகு சாதனப் பொருள்கள், மோட்டார்கள், Love Birds கூடுகள், புதிய வடிவமைப்பிலான மீன்தொட்டிகள், பூச்சாடிகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (21252)

## காணி விற்பனைக்கு

யாழ்.கொக்குவில் சம்பியன் லேன், கே.கே.எஸ். வீதிக்கு அண்மையில் 2 3/4 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவை இல்லை. தொடர்பு: R.றஜனிகாந், இல. 07, ஸ்ரான்லி கலலூரி ஒழுங்கை, நல்லூர் தெற்கு (கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம் முன் ஒழுங்கை) T.P. 0777 - 244466 (இரவு 8.30 இற்குப்பின்). (21310)

## தவறிவிட்டது

அடையாள அட்டை (இல. 523174940 V), கையடக்க தொலைபேசி, மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் பற்றுசீட்டு என்பன அடங்கிய கறுப்புநிறபை ஒன்று ஐந்து சந்திப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மயூரா தச்சுத் தொழிற்சாலை, ஆலடிச் சந்தி, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (21308)

## மணமகன் தேவை

வெளிநாட்டில் வசிக்கும் விவாகரத்துப் பெற்ற 38 வயதுப் பெண்ணுக்கு (ஒரு பிள்ளையுடன்) 45 வயதுக்குட்பட்ட, நற்பண்புள்ள, படித்த, கிறிஸ்தவ மணமகன் தேவை. தொடர்பு: சி.ஈஸ்வரலிங்கம், விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (21307)

## பிரத்தியேக வகுப்பு

கணக்கீடு 2004, 2005 உயர்தர மாணவர்களுக்கு (குழுவினருக்கோ அல்லது தனிநபருக்கோ) நேரில் வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: 071 2246469. (21296)

## பளையில் 9 பாடசாலைகளில் வகுப்பறைத் தொகுதி

தென்மராட்சி,ஓக.12

பளை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பாடசாலைகளில் புதிய வகுப்பறைத் தொகுதிகள் அமைக்க வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பளை மத்திய கல்லூரி, பளை றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை ஆகியவை தவிர்ந்த தற்போது இயங்கும் ஏனைய பாடசாலைகளில் வகுப்பறைத் தொகுதிகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று பாடசாலைகளுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 'நிக்கொட்' நிறுவனத்தினால் வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## கட்டடத் திறப்புவிழா

கைதடி,ஓக.12

கைதடி கிழக்கு கலைநகர் ஜான் அறவழி மழலைகள் கல்விப்பூங்காவின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்விப் பூங்கா வளர்ச்சிக்குழுத் தலைவர் செல்வி கிருஸ்ணன் லலிதினி தலைமையில் கல்விப்பூங்காவின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ-75)

## விற்பனைக்கு

மோட்டோறோலா தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு.
இல.351, கோவில் வீதி, நல்லூர்.
தொடர்பு: 0777 - 485091 (21312)

---

# மனமுவந்து வாழ்த்துகின்றோம்



நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ள அரும் பெரும் சமூக சேவையாளரான

**உயர்திரு.க.இரத்தினம்**

(கிராம சேவையாளர்)

அவர்களை நாம் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

☛ இன்று 12-08-2003 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு அண்ணா சிலையடியில் பாராட்டுவிழா இடம்பெறுகின்றது.

வள்ளுவர் சனசமூக நிலையம்,
அம்பாள் ஆலய பரிபாலன சபை,
இளைஞர் விளையாட்டுக்கழகம்,
சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்,
மகளிர் அபிவிருத்திச் சங்கம்.

அண்ணா சிலையடி,
கரணவாய். (21311) (21-12-17)

---

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சி-29244) (24-13-16)

---

## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டா நிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகைதந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப்பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப்பிரச்சினையா? தீராதநோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!
இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார்.

**மணிசாமி P.T.R ஈஸ்வரி அம்மா**

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்).
இல. 54, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில். பெருமாள் கோயிலடி.)
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

(21-12-17) (21286)

---



உ

அளவெட்டி வடக்கு தவளக்கிரி
**முத்துமாரி அம்மன் கோயிலுக்கு**
**சித்திரத் தேரொன்றினைச் செய்வதற்கான**

## அறிவித்தல்

மேற்படி ஆலயத்துக்கு புதிய சித்திரத்தேர் ஒன்றினை அமைப்பதற்கு சிற்பாசாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர் அமைப்பு முறைகள், அளவுகள் பற்றிய விவரங்களை பரிபாலன சபைத் தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 23.08.2003 ஆகும்.

-பரிபாலன சபையினர்.

க.சின்னத்தம்பி (தலைவர்)
மயிலோடை,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (21297)(21-12-17)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 - 07 - 1936
மறைவு: 25 - 07 - 2002

**அமரர் வேலுப்பிள்ளை தேவராசா** (பொலிஸ் சார்ஜன்ட்)

ஓராண்டு மறைந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள்
என்றென்றும் மறாது!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

மடத்தடி ஒழுங்கை,
சாவகச்சேரி. (21247) (12-17)

---

# 6ஆம் மாத நினைவஞ்சலி

12-08-2003



அன்னை மடியில்: 07 - 06 - 1951
ஆண்டவன் அடியில்: 12 - 02 - 2003

**அமரர் இராசையா இரத்தினகோபாலு**

(இலங்கை வங்கி, திருநெல்வேலிக் கிளை முன்னாள் முகாமையாளர்)

இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளை
திரமிகு முகாமையாளரான செம்மல்
இலங்கு ரத்ன கோபாலு உற்ற நண்பன்
இனித்திடவே எவருடனும் பழகும் அண்ணல்
துலங்குகின்ற பண்பாளன் பண்பும் மிக்கான்
தூரியதன் கடமையிலே கண்ணாய் உள்ளான்
கலங்குகின்றோம் அவன் பிரிவால் நாமெல் லோரும்
கவின்ரத்ன கோபாலு பெறுக சாந்தி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இலங்கை வங்கி,
திருநெல்வேலி. (21309)(21-12-17)

- முகாமையாளரும்,
ஊழியர்களும்.

---

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 02 - 02 - 1917
உதிர்வு: 17 - 07 - 2000

சிவனடி சேர்ந்த

**திருமதி கதிரித்தம்பி தங்கரத்தினம்**

திதி: 12.08.2003 அபரபக்க பிரதமை

அன்னைக்கு எம் அஞ்சலி

*குலவிளக்காய் எம்மனை விளக்காய்*
*என்றும் ஒளிவிட்ட எம் அன்னையே!*
*எங்கண்ணில் நீர் வழிந்தால்*
*உங்களின் நெஞ்சில் உதிரம் கொட்டுமே!*
*இன்று எங்களைப் பிரிந்து எவ்வாறு மனம் பொறுத்து*
*இருக்கின்றீர் எங்கள் பாசத்தை கொள்ளை கொண்ட*
*அன்புத் தாயே!*

உங்கள் நினைவுக்கு எம்கண்ணீரையும் உங்கள் ஆன்மாவுக்கு எம் அஞ்சலியையும் செலுத்துக்கின்றோம் அம்மா!

*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்களின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சித்தாப்பத்தனை,
வல்வெட்டி. (20681) (21-26-12-17)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 - 05 - 1926
உதிர்வு: 10 - 08 - 2002

**அமரர் கணபதிப்பிள்ளை இராசு**

திதி: 12-08-2003

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்
அன்புக்கு இலக்கணமாய் ஆதரவுக்கு அணிகலனாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து எம்மைக் கவர்ந்த
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

3ஆம் கட்டை,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (21305) (21-26-12-17)

உதயன்

# வைத்திய பட்டதாரிகளே நன்றி மறப்பது நன்றா?

பல்வேறு நெருக்கடிகள், இக்கட்டுகளுக்கு மத்தியில இயங்கி வருகின்றது யாழ். போதனா வைத்தியசாலை.

யுத்தக் கோரத்துக்கு மத்தியில் வடபகுதி மக்களுக்கு வைத்திய வசதிகளைத் தரும் ஒரேயொரு - முக்கிய - சேவை நிலையமாக விளங்கியது அது. மருத்துவ, மருந்து வசதிகள் முதல் வைத்தியர், ஊழியர் பற்றாக்குறை வரை நினைத்துப் பார்க்க முடியாத பின்னடைவுகள், குறைபாடுகள் ஆகியவற்றுக்கு இடையிலும் வடக்கு மக்களின் உயிர்காக்கும் நிலையமாகத் திறமையாகப் பணியாற்றிய பெருமை அதற்குண்டு.

இப்போது யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளது. சமாதானச் சூழ்நிலை நீடிக்கின்றது.

நெருக்கடிக்குள் இயங்கிய யாழ். போதனா வைத்தியசாலை இந்தக் காலகட்டத்தில் தனது குறைபாடுகள், நெருக்கடிகளைக் களைந்து உயர்தர சேவைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். அது நியாயமான எதிர்பார்ப்பு.

யாழ். வைத்தியசாலையைப் பொறுத்தவரை - பொதுமக்கள் எதிர்பார்க்கும் வேகத்தில் இல்லாவிட்டாலும் - சிறுகச் சிறுக அதன் பௌதிக வளங்களும் ஏனைய வசதிகளும் உயர்த்தப்பட்டு வருகின்றன. அதில் குறைபாடுகள், தாமதங்கள் இருந்தால் கூட, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு இறுக்கமாக நின்றாவது அந்த வசதிகள், வளங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்; திரட்ட முடியும்.

ஆனால், அப்படியும் பெறமுடியாத ஒரு வசதி குறித்து - மோசமான நிலைமை குறித்து - வடக்கு -கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் குமாரவேற்பிள்ளை சுட்டிக்காட்டியிருக்கின்றார். யாழ். குடாநாட்டு மக்களை விசனத்தில் ஆழ்த்தும் விவகாரம் இது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இருந்து சித்தியடைந்து வெளியேறும் டாக்டர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிய பின்னடிக்கின்றார்கள். யாழ். மருத்துவபீடத்தில் இருந்து பல நூற்றுக்கணக்கில் சித்தியடைந்து வெளியேறிய டாக்டர்களில் குறைந்தது பத்துப் பேர் கூட யாழ். வைத்தியசாலையில் பணிபுரியத் தயாராக இல்லை.

தென்னிலங்கையில் கொழும்பு, கண்டி, காலி போன்ற இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியவே அவர்கள் விரும்புகின்றார்கள். அந்த இடங்களில் நியமனம் பெறப் போட்டி போடுகின்றார்கள். அந்த இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரிய வேண்டிய தமிழ் டாக்டர்களின் எண்ணிக்கையிலும் விட அங்கு ஏற்கனவே கூடுதலான தமிழ் டாக்டர்கள் உள்ளனர். அந்தப் பதவிகளுக்கு ஆள்கள் நிரம்பி வழிகின்றார்கள். வெற்றிடங்கள் இல்லை. இருந்தும் அங்கு நியமனம் பெறுவதற்குப் போட்டியோ போட்டி.

ஆனால், யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டுமன்றி, தமிழ் பேசும் மக்களின் வடக்கு - கிழக்குப் பிரதேசம் எங்கும் - பெரும்பாலும் - டாக்டர்கள் பதவிக்கு உரிய தரத்தில் உள்ளோர் நியமிக்கப்படவில்லை. அவை பெரும்பாலும் வெற்றிடங்களாகக் கிடப்பதால் அந்தந்தப் பிரதேசங்களில் சுகாதார சேவை தொடர்ந்தும் சீரழிந்த நிலையிலேயே உள்ளது. யாழ். வைத்தியசாலையிலேயே பணியாற்ற நம்மவர்கள் தயாராக இல்லை என்றால், வடக்கு - கிழக்கில் மற்றைய பிரதேசங்களின் நிலைமையைச் சுட்டிக்காட்டத் தேவையில்லை. இப்படி கவலையோடு தமது நிலையை வெளிப்படுத்துகின்றார் மாகாண சுகாதாரப் பணிப்பாளர்.

டாக்டர்கள், நிபுணத்துவ வைத்தியர்கள் போன்றோரின் பற்றாக்குறையால் யாழ். வைத்தியசாலையின் வைத்தியசேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மருத்துவபீட மாணவர்களின் வைத்தியக் கல்விகூட இந்தப் போதனா வைத்தியசாலையில் தான் தங்கியிருக்கின்றது. தகுதியான வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள் இல்லாததால் யாழ். மக்களின் சுகாதார சேவை மட்டுமன்றி, தங்களின் கல்விகூட - பயிலும் காலத்தில் - கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது; பாதிக்கப்படுகின்றது என்பது யாழ். மருத்துவபீடத்திலிருந்து சித்தி பெற்று வெளியேறிய மருத்துவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல; புரியாத விடயமும் அல்ல.

மருத்துவ பட்டப்படிப்புக்குப் பின்னர் மேல் கல்வியில ஆர்வமுள்ள இளம் மருத்துவர்களுக்கு தென்னிலங்கை வைத்தியசாலைகள் பிரகாசமான எதிர்காலத்தைத் தரக்கூடியன என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

என்றாலும் தாம் உருவான - தம்மை உருவாக்கிய - சமூகத்தை அவர்கள் அடியோடு மறந்து புறக்கணித்து விடக் கூடாதல்லவா? செய்நன்றி கொல்லாமல் இருப்பது மனிதப்பண்பு அல்லவா? அதையே சுட்டிக்காட்ட விழைகிறோம்.

# இந்தியாவுடன் கட்டுப்பாடற்ற வர்த்தகம் செய்வதற்கு இலங்கை அதிக நாட்டம்

## பெங்களூரில் நடந்த கருத்தரங்கில் அமைச்சர் ரவி கருணாநாயக்க உரை

பெங்களூர்,ஓக.12

இந்தியாவுடன் கட்டுப்பாடற்ற வர்த்தகம் மேற்கொள்ள இலங்கை விரும்புகிறது என்று இலங்கை வர்த்தக மற்றும் நுகர்வோர் நலத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் கடந்த சனிக்கிழமை நடந்த கருத்தரங்கில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா - இலங்கை இடையே வரியில்லாத வர்த்தக ஒப்பந்தம் ஒன்று கடந்த 2002 மே மாதம் கையெழுத்தானது. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் நன்மைகள் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே, இந்தியாவில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட பல தனியார் நிறுவனங்கள் இலங்கையில் ரூ.600 கோடிக்கு முதலீடு செய்துள்ளன.

ஆனால், இதே அளவுக்கு இலங்கையில் உள்ள வர்த்தகர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய இயலாத நிலை உள்ளது. இரு நாடுகளும் ஒன்றை ஒன்று புரிந்துகொண்டு ஏற்றுமதிக்காக 3ஆவது நாட்டுடன் போட்டியிட வேண்டும்.

இந்தியாவுடன் கட்டுப்பாடற்ற வர்த்தகம் மேற்கொள்ள இலங்கை விரும்புகிறது. பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தப்படி இந்த ஆண்டு இறுதியில் இந்த வர்த்தகம் சாத்தியமாகும் என நம்பப்படுகிறது.

வரியில்லா வர்த்தகம் மூலம் இந்தியாவுக்கும் நல்ல பலன் கிடைக்கும். இலங்கை ஏற்கனவே அமெரிக்கா, ஐரோப்பா, தாய்லாந்து, எகிப்து ஆகிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டுள்ளது.

மத்திய வர்த்தகத்துறை அமைச்சராக முரசொலிமாறன், இருந்தபோது வர்த்தகத்தில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதால் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்களின் விகைகள் இந்தியாவுக்கு வரியின்றி இறக்குமதியாகின்றன.

பெங்களூரில் இருந்து இலங்கைக்கு வாரத்துக்கு 7 முறை விமானப் போக்குவரத்துத் தேவை உள்ளது. பொதுத்துறை நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் எத்தனை விமானங்களை வேண்டுமானாலும் கொழும்புக்கான போக்குவரத்தில் ஈடுபடுத்தலாம்.

இலங்கையில் தற்போதுள்ள புதிய அரசு இனப்பிரச்சினைகுத் தீர்வுகாணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. 20 ஆண்டுகளாக நடந்த சண்டையில் இலங்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. விரைவில் இலங்கை உன்னத நிலையை அடையும் - என்றார் அவர்.

(ம)

# சுயவிருப்பில் ஓய்வு பெறுவோருக்கு சேவைக்கால அடிப்படையில் நஷ்டஈடு

## திறைசேரியினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.12

அரசாங்க சேவையில் இருந்து சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு அவர்களது சேவைக்காலத்துக்கு அமைவாக ஒரு தொகை நிதியினை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில் ஓய்வுபெறுகின்ற முதல்தர ஊழியர்கள் 6 லட்சம் ரூபாவையும் நடுத்தர ஊழியர்கள் 5 லட்சம் ரூபாவையும் சிற்றூழியர்கள் நாலரை லட்சம் ரூபாவையும் உயர்ந்தபட்ச நஷ்டஈட்டுத் தொகையாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான சுற்றறிக்கையொன்று கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள், அதிகாரசபைகள் ஆகியவற்றுக்கு திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்தவத்தவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வுபெறும் ஊழியர்கள் பின்னர் அரசாங்க சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

அத்துடன், நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளில் தற்பொழுது பணியாற்றும் ஊழியர்களுக்கும் -

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் சேவைக்காலம் முடிவுற்றபின்னர் மீண்டும் சேவைநீடிப்பு வழங்கப்படமாட்டாது என்றும் - அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இத்திட்டமானது முதலில் விமானநிலையம், விமானப் போக்குவரத்து அதிகாரசபை, கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம், தபால் திணைக்களம், சுகாதார சேவை திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்கள் மத்தியிலேயே செயற்படுத்தப்படவுள்ளது என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

### சமாதான சூழல் நிலைபெறக்கோரி

# உரும்பிராயிலிருந்து நீர்வேலிக்கு சனியன்று செபமாலைப் பேரணி

யாழ்ப்பாணம்,ஓக.12

சமாதான சூழல் நிலைபெறவேண்டும் எனக்கோரி எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராயில் செபமாலைப் பேரணி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் விசேட திருப்பலி இடம்பெறும்.

பின்னர் பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கும் செபமாலைப் பேரணி பலாலி வீதிவழியாக நீர்வேலி பரலோக அன்னை ஆலயத்தைச் சென்றடையும்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பக்தர்கள் இந்தப் பேரணியில் கலந்துகொள்வர் என்றும் -

செபமாலைப் பேரணியில் கலந்து கொள்பவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் -

உரும்பிராய் பங்குத்தந்தை அருட்திரு சி.ஜே.அன்ரனிபாலா அடிகளார் தெரிவித்துள்ளார்.

சமாதானம் மலர அன்னைமரியாள் பரிந்துரை புரியவும் அவளது வழிகாட்டலும் அரவணைப்பும் எமக்குக் கிடைக்கவும் வேண்டியே இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் -

பக்தர்கள் அனைவரும் பேரணியில் கலந்துகொண்டு சமாதானத்துக்காய் பிரார்த்திக்க வேண்டும் என்றும் பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (எ)

# இந்து குருமாரையும் தலைவர் பிரபா சந்தித்துப் பேசவேண்டும்

## குருமார் ஒன்றியத் தலைவர் கோரிக்கை

வலி.வடக்கு,ஓக.12

எல்லாமதத் தலைவர்களையும் சந்தித்துக் கதைக்கும் தேசியத் தலைவர் இந்து மதகுருமாரை சந்தித்து உரையாடவில்லை.

எனவே, இனிமேலாவது இந்துமத குருமாரை தேசியத் தலைவர் சந்தித்து உரையாடுவதற்கான ஒழுங்குகளை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் செய்துதர வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்தார் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ க.மனோகரக்குருக்கள்.

பளை மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கியபோதே சிவாச்சாரியார் இந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

சமாதான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட இந்துக்குருமார்கள் தம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்குவர் என்றும் -

சமாதானம் நிலைபெற சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அயராது முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் -

சிவஸ்ரீ மனோகரக்குருக்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

மேற்படி பேராளர் மாநாட்டில் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த சிவாச்சாரியார்கள் பலரும் கலந்துகொண்டனர். (எ-86)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரை விசர்நாய் கடித்தது

## கல்வயல் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,ஓக்.12

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் விசர்நாயினால் கடியுண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த வி.வேலாயுதபிள்ளை (வயது 60), அவரது மனைவியான வே.கமலாதேவி (வயது 50), அவரது மகளான வே.தயாளினி (வயது 25), வி.செந்தில் (வயது 30) ஆகியோரே விசர்நாயினால் கடியுண்டவர்களாவர்.

இவர்களது வளர்ப்பு நாயைத் துரத்திவந்த விசர்நாய் வீட்டிலிருந்தவர்களை கடித்துவிட்டு ஓடித தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

விசர்நாயினால் கடியுண்ட இந்த நால்வரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த அம்பிகாபதி அமீர் (வயது 14) என்ற சிறுவனும் விசர்நாயினால் கடியுண்ட நிலையில் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (எ-112)

### நாளை

ஆடி 28
புதன்கிழமை
(13.08.2003)
திதி : பிரதமை
முற்பகல் 10.27 வரை
நட்சத்திரம: அவிட்டம்
முற்பகல் 8.26 வரை
சுபநேரம்: 4.35 - 6.05
ராகுகாலம்: 12.05 - 1.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

விரோதத்தை விட எப்பொழுதும் தோழமை இயல்பு தான் சாதனைகளை எட்ட உறுதுணையாக உள்ளது.

### தென்மராட்சி தெற்குப் பகுதியில்

# கட்டாக்காலிகளைப் பிடிக்கும் நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்பு

தென்மராட்சி,ஓக.12

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்காக இப்பகுதியில் கட்டாக்காலிகளாக அலையும் மாடுகளை பிடிப்பதற்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு இப்பிரதேச மக்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தினால் சொத்துக்களை இழந்த இப்பிரதேச மக்கள் தற்போது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து தமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப கால்நடைகள் உதவியாக இருக்கும் என எதிர்பார்த்திருந்தனர் என்றும் -

இந்தவேளையில் மாடுகள் பிடிக்கப்படுமானால் கடந்த மூன்று வருடத்தில் குறியிடப்படாத மாடுகள் அவற்றின் உரிமையாளர்களிடம் சென்றடைய முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்றும் - சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேவேளை - மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள கைதடி - நாவற்குழியின் தெற்குப் பகுதியூடாக மாடுகள் கடத்தப்பட்டு வருகின்றன என்றும் -

இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் தத்தமது பகுதி விவசாய சம்மேளனங்களுக்கு முறையிட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.(எ-117)

# ஒவ்வொரு மனிதனதும் அரசியல் உரிமையை தட்டியெழுப்பக் கோருகிறார் தமிழ்ச்செல்வன்

## தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் முன் உரை

தேசிய எழச்சிப் பேரவையின், யாழ்.மாவட்ட, கோட்ட, பிரதேச, கிராமிய கிளைகளின் உறுப்பினர் களுக்கான கூட்டம் பளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சுமார் 3,000 பேர் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்புரையாற்றினார். அவரது உரையில் இன்றைய அரசியல் நிலைபற்றிய – இடைக்கால நிர்வாகம் பற்றிய – பகுதி நேற்றைய 'உதயனின்' முதற்பக்கத்தில் வெளியாகி இருந்தது. அது தவிர்ந்த, தமிழ்ச்செல்வனின் முழுமையான உரையின் தொகுப்பு இங்கு வெளியாகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு எதிரியின் இரும்புப் பிடிக்குள் சிக்கி, ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்தபோதிலும், எமது தேசியத் தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கின்ற இந்த தேசிய எழுச்சிப்பேரவைக்கு ஒததுழைப்பு வழங்கியமையையிட்டு நான நிறைவடைகிறேன்.

எழுச்சிப் பேரவைகளை சகல மாவட்டங்களிலும் அமைக்க வேண்டும் என்று நாம் தீர்மானித்தபோது எமக்கு ஒரு பிரச்சினை எழுந்தது. இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த அமைப்பை எவ்வாறு உருவாக்குவது என்பதே அந்தப் பிரச்சினையாகும்.

இராணுவ ஆக்கிரமிப்புகள், அடக்குமுறைகள், அச்சுறுத்தல்களுக்குள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் இவ்வாறான அமைப்பை கட்டியெழுப்புவது சாத்தியமாகுமா என்று சிந்தித்துப் பார்த்தோம்.

ஆனால், அந்த சந்தேகங்களையெல்லாம் உடைத்தெறியக்கூடிய வகையில், இன்று யாழ். குடாநாட்டு மக்கள் அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகளையும் பாராது எமது தலைவரின் வழியில் ஒன்று திரண்டுள்ளனர். இது எமது போராட்டத்துக்கு மேலும் உந்துசக்தியாக அமைந்திருக்கின்றது.

தமிழ் இனத்தின் வரலாற்றிலே ஒரு மிக முக்கியமான காலகட்டத்திலே நாங்கள் நின்று கொண்டிருக்கின்றோம்.

இலங்கை சுதந்திரமடைந்தது என்று சொல்லப்படுகின்ற காலப்பகுதியிலிருந்து தமிழ் மக்களாகிய நாம் எமது வாழ்வுரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால், இன்றுதான் எமது விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது.

எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எமது மூத்த தலைவர்கள் பல வழிகளிலும் போராடினார்கள்.

நாடாளுமன்றத்திலே இருந்து ஜனநாயக வழியில், அஹிம்சை வழியில் எனப் பல போராட்டங்களை அவர்கள நடத்தினார்கள். ஆனால், எதுவுமே எதிரியின் செவிகளில் விழவில்லை.

அவர்கள் எமக்குத் தந்ததெல்லாம வன்முறையும், இன அழிப்பும், சொத்தழிப்பும், இடப்பெயர்வும்தான். இந்த நிலையில்தான் வரலாறு எமக்கொரு தலைவனைத் தந்தது. அந்தத் தலைவனுடைய காலத்திலே மீண்டும் எமது இனம் எழுச்சிகொண்டு போராடமுற்பட்டது.

அந்தக் கட்டத்தின் வளர்ச்சிப் போக்குதான் இன்றைய மாற்றம்.

இன்று உலக அரங்கிலே தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை தலைநிமிர்ந்து நிற்கின்றது; உரிமைக்காகக் குரல் கொடுக்கின்றது.

எமது மக்களின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்வதற்கும நசுக்குவதற்கும் இன்று பலர் பல வழிகளிலே முனைந்து நிற்கின்றார்கள்.

அனைத்து மக்களும் ஒன்றுபட்டு உறுதியான ஓர் அரசியல் விழிப்புணர்வோடு, ஒரு தலைமைத்துவத்தின் கீழ் போராடவேண்டிய காலகட்டம் இது.

இந்த நாட்டில் சிங்களப் பேரினவாதம் காலத்துக்குக் காலம் தொடர்ச்சியாக எமது சமாதானக் கரங்களை உதாசீனப்படுத்தியது. நாங்கள் சமாதானத்துக்காக வேண்டிய போதெல்லாம், எம்மீது யுத்தத்தை ஏவிவிட்டது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலும் நாம் ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செய்தோம். ஆனால், எம்மீதான யுத்த தயார்படுத்தலுக்காக சந்திரிகா அம்மையார் அப்போதைய சமாதான காலத்தை பயன்படுத்தினார். எமது தலையில் மீண்டும் யுத்தம் திணிக்கப்பட்டது. அந்த யுத்தத்துக்கு அவர் வைத்த பெயர் 'சமாதானத்துக்கான யுத்தம்'.

இந்த சமாதானத்துக்கான யுத்தம் தான் தமிழர் வரலாற்றிலே என்றுமில்லாத பெரும் அவலங்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தியது. அதிலும் குறிப்பாக குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக தனது முழுப் பலத்தையும் திரட்டி பாரிய யுத்தம் ஒன்றைச் சந்திரிகா அம்மையார் ஆரம்பித்திருந்தார்.

இலங்கைத்தீவில் சமாதானத்தை கொண்டுவரவேண்டுமாக இருந்தால் விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்று சந்திரிகா உலகெங்கும் பொய்யான பரப்புரையைச் செய்தார். அதனை ஒரு கட்டத்தில் உலகமும் நம்பியது.

நாங்கள் ஒரு கட்டத்தில் யாழ். குடாநாட்டைவிட்டு பின்நகர வேண்டிய நிலை ஏற்பட்டது. தலைவர் அந்த முடிவை எடுத்தபோது மிகவும் வேதனை அடைந்தார். எமது மக்களை விட்டு விலகுகின்றோம் என்ற வேதனை தலைவருடைய, தளபதிகளுடைய, பொறுப்பாளர்களுடைய ஆழ்மனங்களை மிகவும் துன்புறுத்தியது.

எனினும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய ஒரு தூரநோக்குடன், மீண்டும் எமது மக்களை மீட்டெடுப்போம் என்ற நம்பிக்கையுடன் இருந்தோம். ஒவ்வொரு போராளிகளின் மனதையும் மிகவும் புண்படுத்திய விடயம் அது.

பல லட்சம் மக்கள் எங்களுடன் சேர்ந்து வெளியேறினார்கள். சில லட்சம் மக்கள் வெளியேற முடியாத நிலையில் இக்கட்டுக்குள் சிக்கினார்கள்.

மீண்டும் போர் அரக்கன் எம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டான். பல கொடுமைகளை, அவலங்களை, நெருக்கடிகளை நாம் சந்தித்தோம்.

செம்மணிப் புதைகுழி போன்ற பல கொடுமைகள் எமது மக்களுக்கு இழைக்கப்பட்டன. அந்த வேதனைகளையும் அவலங்களையும் கேட்டு தலைவரும், நாங்களும், சகல போராளிகளும் துடித்தோம்.

ஆனாலும், எமது தமிழீழத்தை மீண்டும் மீட்டெடுத்து மக்களுக்கு புதிய வாழ்வை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் போராட்டத்தை வழிநடத்தினோம்.

சொத்துக்களை இழந்தோர், இழந்திழந்து ஓடி ஓடி ஒரு கட்டத்திலே எமது இனம் நிமிரவேண்டிய வரலாற்று நியதி ஏற்பட்டது.

அந்த வரலாற்று நியதியை - வரலாற்றுப் பொறுப்பை - எம் தலைவர் கையில் எடுத்தார். அதன் பின் எமது இனம் புதிய பாதையில் - யதார்த்தமான சூழ்நிலையை புரிந்துகொண்டு பயணித்தது.

தமிழீழ தேசத்திலே மீண்டும் நிலைபெற்று வாழக்கூடிய சூழலை எமது தலைவர் உருவாக்கினார்.

அப்போது புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள். அவர்களை முற்றாக அழிக்க இன்னமும் வெகு காலம் தேவையில்லை என்று வெளிநாடுகளில் உதவி கோரினார் சந்திரிகா.

அந்தப் பிரசாரத்தை உலகம் நம்பியிருந்தபோது எமது தலைவர் எவருமே எதிர்பார்த்திராத வகையில் முல்லைத்தீவு தளம்மீது புதிய பாய்ச்சலைத் தொடுத்தார்.

பெருமளவு படைகளை அழித்து கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் மீட்டு முல்லை நகரை எம்வசமாக்கினோம். எல்லோருமே அதிர்ந்து போனார்கள்.

'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கையே சந்திரிகாவின் பொய்ப் பிரசார முறியடிப்பின் ஆரம்பம். தமிழர்களின் படையாக நிமிர்ந்து நின்ற எம்மை வன்னியிலே வைத்து அழிப்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கையாக 'ஜெயசிக்குறு' தொடங்கப்பட்டது.

அதனை எமது தலைவர் மிக இலகுவாக முறியடித்தார்.

வன்னியை முற்றாகக் கைப்பற்றி கண்டி வீதியால் யாழ்ப்பாணத்துக்கு வரக் கனவுகண்டவர் அனுருத்த ரத்வத்த.

அது மட்டுமல்ல, 'ஓயாத அலைகள்' இரண்டு, மூன்று நடவடிக்கைகள் மூலம் வன்னியின் சில பகுதிகளில் கால்பதித்து நின்ற எதிரியை விரட்டினோம். உலகம் அப்போது திகைத்து நின்றது.

தமிழர்களின் அடிமைச் சின்னமாக இருந்த ஆனையிறவையும் தகர்த்தெறிந்தோம். தமிழர்களின் பலத்துடன் விடுதலைப் புலிகள் நடத்தும் இந்த யுத்தத்தை ஒரு போதும் முறியடிக்க முடியாது என்பதை உலகமே புரிந்துகொண்டது.

சிங்கள அரசுகள் ஒவ்வொன்றும் தமது பேரினவாத எண்ணங்களை நிறைவேற்றுவதற்காக தமிழர்களுடன் அவ்வப்போது பல ஒப்பந்தங்களைச் செய்தன. பின்னர் அந்த ஒப்பந்தங்கள் யாவும் அரசுகளால் மறுகணமே கிழித்தெறியப்பட்டன; தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள்.

ஆனால், ஆனையிறவு வெற்றிக்குப் பின்னர் ஒரு புதிய மாற்றம் இங்கு தோன்றியது. தமிழர்களை ஏமாற்றுவதோ அவர்களை வெல்வதோ ஒரு போதும் முடியாத காரியம் என்பதை சிங்களத்தரப்பு புரிந்துகொண்டது.

அப்போதுதான் மூன்றாந்தரப்பான நோர்வேயின் ஊடாக எம்மைப் பேச்சுக்கு அழைத்தது ஸ்ரீலங்கா அரசு. அதனை எமது தலைவரும் முழுமையாக ஏற்றுக்கொண்டார். •

சர்வதேச சமூகத்துக்கு எமது மக்களின் நிலையை எடுத்துச் சொல்வதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துவோம் என்ற நிலையில் அதனை நாமும் ஏற்றோம்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க முடியாத நிலையில் தமிழருடன் சமரசம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்பட்டது.

ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை நாம் மீண்டும் அறிவித்தோம்.

நான்கு மாதங்களாக எமது சமாதான கரத்தை நீட்டி ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் செய்திருந்த வேளை மீண்டும் ஆனையிறவைக் கைப்பற்றும் நப்பாசையில் சந்திரிகா பாரிய படைநடவடிக்கையைத் தொடங்கினார்.

நான்கு மாதங்களாக பல்லைக் கடித்துக் கொண்டு எமது தலைவர் பொறுமை காத்திருந்தார். அத்துடன் யுத்தநிறுத்தமும் முடிவுக்கு வந்தது. அடுத்த நாள் அதிகாலையிலேயே சந்திரிகாவின் படைகளுக்கு சமாதி கட்டப்பட்டது. இருந்த அற்பசொற்ப பலத்தையும் அரசு இழந்தது. இனி இராணுவ ரீதியில் தமிழர்களை அழிக்க முயல்வது தங்களைத் தாங்களே அழிக்கின்ற நடவடிக்கையாக அமையும் என்பதை அரசு புரிந்து கொண்டது.

**தொகுப்பு:**
**அற்புதன்**

அதற்குப் பின்னர் ஸ்ரீலங்காவின தலைநகரில் அதி உச்ச பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் புலி புகுந்து விளையாடியது.

கட்டுநாயக்காவில் புலிகள் தமது கைவரிசையைக் காட்டினார்கள். ஒரு தலைப்பட்சமாக நாங்கள் யுத்தநிறுத்தம் செய்து சமாதானக் கரம் நீட்டியிருந்த பொழுது எமது மக்கள் மீது குண்டுகளை வீசி அழிவுகளை ஏற்படுத்திய நவீன விமானங்கள் ஒரே இரவில் துண்டுதுண்டாகின.

தலைவாசலில் ஏற்பட்ட பாரிய தாக்குதலினால் ஒரு நாள் கூட அரசை நகர்த்தமுடியாத ஒரு பாரிய பொருளாதார நெருக்கடியை ஸ்ரீலங்கா அரசு சந்தித்தது.

தமிழ் மக்களுடன் யுத்தம் புரிவோம் என்று கூறிக்கொண்டு வருகின்ற சிங்களத் தரப்புக்களை சிங்கள மக்கள் கூட ஏற்றுக்கொள்ளாத நிலையை ஏற்படுத்துவதற்கு எமது தலைவர் எம்மை வழிநடத்தினார்.

சிங்கள தேசத்திலும் புதிய மாற்றம் ஏற்பட்டது. தமிழ்மக்களின் மீது எவ்வளவு தூரம் அழிவுகளும் அவலங்களும் ஏவப்பட்டதோ அதன் தாக்கம் சிங்கள தேசத்தின் கதவுகளையும் தொட்டுநின்றது.

தமிழர்கள் பலமடைந்து தம்மை அழிப்பவர்களை எதிர்த்து நின்று போராடக் கூடிய வலிமையைப் பெற்றுவிட்டார்கள் என்ற உண்மையை சிங்களதேசம் புரிந்துகொண்டது.

தந்தை செல்வா அவர்கள் காலங்காலமாக பல தடவைகள் ஜனநாயக வழியில் சமாதானத்துக்கான சகல முயற்சிகளையும் முனைந்து பார்த்தார். இறுதியாக அவர் இறக்கும் போது சிங்கள தேசத்துக்கு ஒரு யதார்த்தத்தை வெளிப்படுத்திவிட்டுச சென்றார்.

"நாங்கள் உங்களுடன் பேசிப் பேசி ஏமாந்து போனோம். ஆனால், இனிவருகின்ற எமது தலைமுறை உங்களுடன் பேசாது" என்று கூறிவிட்டுச் சென்றார் தந்தை செல்வா.

இந்த நாட்டில் கல்வியிலோ, பொருளாதாரத்திலோ உயர்ந்தவர்களாக ஒரு காலத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள். தமிழ்மக்கள் பண்பானவர்கள், படித்தவர்கள், நேர்மையானவர்கள், மென்மையானவர்கள் என்ற ஒரு காலப்பதிவு இங்கு உண்டு.

இதனையே சிங்கள தேசம் எமது பலவீனம் என்று நினைத்து எம்மை அழித்துதொழிக்க முயன்றது; கல்வியிலே கைவைத்தது; பொருளாதாரத்தை முடக்கியது.

அப்போதுதான் எமதுதலைவனின் பிறப்பும் அதனைத் தொடர்ந்து விடுதலைப் போராட்டமும் ஆரம்பித்து முனைப்புப்பெற்று இன்றைய உயர்ந்த நிலைக்கு வந்தன.

எமது முன்னைய தலைமுறை எதிரியால் அழிக்கப்பட்டது; கொடுமைப்படுத்தப்பட்டது. அந்த நிலைமை இப்போது இல்லை. தூர நோக்கு கொண்ட தீர்க்க தரிசனமிக்க எமது தலைவனின் காலத்திலே நாம் போராடுகின்றோம்; பணிசெய்கின்றோம் என்று நினைக்கும்போது எமக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது.

இனி ஒருபோதும் தமிழ் மக்களுக்கு அவலங்களையும் அழிவுகளையும் எவராலும் ஏற்படுத்த முடியாது.

கடந்த பல வருடங்களாக உறுதியுடன் போராடி, எம்மை எவரும் அசைக்க முடியாது என்ற யதார்த்த நிலையை ஸ்ரீலங்கா அரசுக்கு உணர வைத்து எம்முடன் சமரசம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை நாம் ஏற்படுத்தினோம். அதன் விளைவுதான் புரிந்துணர்வு உடன்படிக்கை. எங்களின் தேசியத் தலைவரும் ஸ்ரீலங்காவின் பிரதமரும் சர்வதேச அனுசரணையுடன் - இருதரப்பும் சம அந்தஸ்துடன் - கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தினால் இன்று இங்கு ஓர் அமைதியான சூழல் நிலவுகிறது.

யுத்தம் நிறுத்தப்படுவது மட்டுமல்ல, புரிந்துணர்வு உடன்படிக்கையின் சாராம்சம் எமது மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்தி எமது மக்களின துன்பங்களை நீக்குவதும் உடன்படிககையின் அம்சம் என்பது இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால், அதிலும் குளறுபடி. எமது மக்கள் மத்தியில் இயல்பு வாழ்வை ஏற்படுத்த சிங்கள பேரினவாத சக்திகள் தயாராக இல்லை. வழமை போல இந்தத் தடவையும் சமாதான முயற்சிகளைக் குழப்பியடிக்கப் பேரினவாத சக்திகள் முயன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதில் குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற பெயரில் இருக்கின்ற ஜனாதிபதி சந்திரிகாவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் அதற்குத் தலைமை தாங்குவது மிகவும் வேதனையான விடயம்; உலகத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ள விடயம்.

ஆனால், நாங்கள் மிகவும் உறுதியுடனும் பலத்துடனும் இருக்கிறோம். அதனால் சமாதானக் கரத்தை நீட்டியபடியே இருக்கிறோம்.

ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்ட இனம் அடிபணிந்து சரணாகதி அடையும் என்று சிங்கள அரசுகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் அது பலிக்காது, மக்களும் புலிகளும் உறுதியுடன் பின்னிப் பிணைந்து நிமிர்ந்து நிற்கிறோம்.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்துவிட்டன. ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. நாங்கள் பல சந்தர்ப்பங்களை அளித்துப்பார்த்தோம்; விட்டுக் கொடுப்புக்களைச் செய்து பார்த்தோம். ஆனால், எமது இனத்தை பலவீனப்படுத்தும் நோக்குடன் விட்டுக்கொடுப்புகளை செய்யவில்லை.

அந்த விட்டுக் கொடுப்புகள் எதிர்காலத்திலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும்; எமது மக்களுக்கு ஒரு நல்ல வாழ்வு நிலையைக் கொண்டு வரும் என்ற நோக்கோடு அவற்றைச் செய்தோம் ஆனால், அவர்கள் அதனை செவிமடுக்கவில்லை. யுத்த நிறுத்தத்தின் மூலம் என்ன விளைவு ஏற்படும் என்று நாம் எதிர்பார்த்தோமோ அது ஏற்படவில்லை.

மீண்டும் எங்கள் மீது நெருக்குவாரங்களும் இறுக்கங்களும் அதிகரித்துக்கொண்டு போவதையே பார்க்கின்றோம்.

சர்வதேச கண்காணிப்புடன் யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கிறது. ஆனால், படைத்தரப்பு அதனைப் பயன்படுத்தி எம்மைச் சீண்டுகின்றது.

சர்வதேச சமூகம் இதற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது வாழ் விடத்திலே வாழும் உரிமையைப் பெற்றவர். ஐ.நா. சாசனத்தில் கூட இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், உடன்படிக்கை ஏற்பட்டு ஒன்றரை வருடங்கள் ஆகியும் எமது மக்கள் அவர்களது வாழ்விடங்களுக்கு செல்ல முடியாத நிலை தொடர்கிறது. இதற்கு சர்வதேச சமூகம் எமக்குப் பதில்தர வேண்டும்.

யுத்தம் நடைபெற்ற போது அதற்கெதிராக ஆயுதப்போரை செய்து வெற்றி கண்டோம். இப்பொழுது யுத்தம் வேறுபட்டிருக்கின்றது.

மக்கள் அனைவரும் கிளர்ந்தெழுந்து போராட வேண்டிய கட்டம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. எமது நிலத்திலே நாம் சென்று வாழ்வதனை எவருமே மறுக்கமுடியாது. அதற்கு எந்தச் சாட்டும் சொல்ல முடியாது.

இன்று அரசியல் ராஜதந்திர அரங்கிலே ஒரு போர் நடக்கிறது. இந்த ராஜதந்திர போரிலும் எமது தலைவர் தனது மதிநுட்பமான காய்நகர்த்தலினால் சிறப்பான வெற்றியை ஈட்டித் தருவார் என நாம் நம்புகிறோம்.

டோக்கியோ மாநாட்டுக்கு நாங்கள் போகவில்லை என்று சிலர் ஆதங்கப்பட்டார்கள். பின்பு அவர்கள் அதனை புரிந்துகொண்டு விட்டார்கள். எமது தலைவர் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவுகளும் உடனடியாக சிலருக்கு விளங்காமல் போகலாம். ஆனால், பின்னர் அது எமது இனத்தை எவ்வளவு தூரம் காக்கும் என்பதை புரிந்துகொள்ளவார்கள்.

புலிகள் எதிர்பார்ப்பது தமிழ் மக்களுக்குரிய சம அந்தஸ்து. அந்த அங்கீகாரத்தோடு அழைக்கப்பட்டிருந்தால் நாம் அங்கே சென்றிருப்போம். புலிகளை அழைத்து, அங்கே புலிகள் மீது நிர்ப்பந்தங்களைப் போட்டு, அழுத்தங்களைப் பிரயோகித்து புலிகளுக்கு தலைகுனிவை ஏற்படுத்த முயன்றிருந்தால் அது தமிழ் மக்களை தலை குனிய வைக்கும் அரங்காக மாறியிருக்கும். எங்களுடைய மக்களின் எதிர்கால நன்மைகளைக் கருத்திற்கொண்டு எமது தீர்மானங்கள் அமையுமே தவிர எம்மை எந்த அழுத்தங்களாலும் பணிய வைக்க முடியாது.

ஒன்றுபட்டு ஒரு தலைமையின் கீழ் நிற்கின்ற மக்களின் போராட்டங்களை தமது குறுகிய நோக்கங்களிற்காக கொச்சைப்படுத்துவதற்கு சிலர் முயற்சி செய்வதாக அண்மைக் காலங்களில் நாம் காணக்கூடியதாக உள்ளது. அதை நினைத்து மிகவும் வேதனைப்படுகிறோம்.

மன்றாட்டமாகக் கேட்கிறோம் எமது இனத்தைக் காட்டிக் கொடுக்காதீர்கள்; எவ்வளவோ அழிவுகளைக் கொடுத்து இன்று நிமிர்ந்து நிற்கிறோம். எமது உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்காமல் விலகி நின்றவர்களுக்கெல்லாம் யதார்த்தத்தை உணர்ந்து பெருமளவில் வந்து எங்களுடன் இணைந்து நிற்கின்ற சூழலில் ஒரு சிலர் மட்டும் இப்படியான வேலைகளில் ஈடுபடுவதை யிட்டு நாம் வேதனை அடைகிறோம்.

கட்சி பேதங்களின்றி, ஏற்றத்தாழ்வுகள் இன்றி எல்லோரும் ஒன்றுபட்டு எமது பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வுகளை நோக்கி செல்வதற்கான ஒருமக்கள் கட்டமைப்பே இந்த தேசிய எழுச்சிப் பேரவை.

எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயிக்கின்ற ஒட்டுமொத்த பலம் பொருந்திய ஓர் அமைப்பாக

(13ஆம் பக்கம் பார்க்க)

## புற்றுநோய் வைத்திய நிபுணர் வருகை

புற்றுநோய் வைத்திய நிபுணர் Dr.வாணி அவர்கள் இன்று 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நாளை 13ஆம் திகதி புதன்கிழமையும் எமது கிளினிக்குக்கு வருகைதருகின்றார்.

- நிர்வாகி

சம்பந்தர் மொடேன் கிளினிக்
யாழ்ப்பாணம்.

(21287) (24-21-14-19)

உ

நல்லூர் கந்தன் மஹோற்சவ கால
தெய்வீகத் தொடர் இசைப்பேருரை
நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்துவிநாயகர்
ஆலய மண்டப அரங்கில்

### திருவிளையாடற் புராணம்

"கானகதாவாரிதி"
பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா
'அணிசேர்கலைஞர்கள்'
வித்துவான் பிரம்மஸ்ரீ V.தியாகராஜசர்மா - வயலின்
வித்துவான் T.ராஜன் - மிருதங்கம்
*தினமும் மாலை 6மணிக்கு நடைபெறும்.*

மேற்படி
நல்லூர் சைவமகாசபை

அன்பளிப்பு:
**சங்குசக்கரம்-சஞ்சீவி பெயின்ற் ஹவுஸ்**
ஸ்ரான்லி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(21293) (26-21-14-19)

## வீடமைப்பு பற்றி கலந்துரையாடல்

தெல்லிப்பழை,ஓக.12

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன் வீடுகள் அமைக்கப்பெற்ற அல்லது அமைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு உதவித் திட்டப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. வீட்டுத்திட்ட பயனாளிகள், கிராமமட்ட சமூக பிரதிநிதிகள், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரை இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-150)

## மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல் நடுகை

சாவகச்சேரி,ஓக.12

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் புதிய மாடிக் கட்டடத்தொகுதி நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன் சம்பிரதாயபூர்வமாக மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார். (எ-31)

## நீர்வீழ்ச்சியில் இளைஞர் பலி!

லக்ஸபான நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டார். கண்டியைச் சேர்ந்த 22வயதுடைய இளைஞர் ஒருவரே கடந்த சனியன்று பிற்பகல் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-6-12)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு

தோற்றம் 1932 - 07 - 03



மறைவு 2002 - 07 - 24

### அமரர் முருகேசு இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துநர்)

அன்பின் தெய்வமே. அப்பாவே
ஆறிரண்டு திங்கள் பறந்ததுவே
இன்று எம்மத்தியில் நீங்களில்லை
ஈரவிழிகளுடன் நாம் தவிக்கின்றோம்
எத்தனை இன்பங்கள் எமக்கு வந்தாலும்
ஏங்கி நிற்கின்றோம் உருவப் படம் முன்னே
உங்கள் ஆத்மா சாந்தி பெற குலதெய்வம்
நாராயணரின் பாதங்களைப் பணிகின்றோம்.

*என்றும் உங்கள் நினைவால் வாடும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(21298)(21-14-19)

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அநேக வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க இம்மாதம் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள 'புத்தகக் கடல்'. 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

எல்லா விதமான கடன் காட்டும் (Credit Card) ஏற்றுக்கொள்ளப்படும்.

### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

*இல. 212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.* T.P.021-222 5542

(C/29279) (21-14-16)




சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.

சமாதான முன்னெடுப்புக்களால் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக நம் பிள்ளைகள் பயனடைகின்றனர். நாடும் நன்மை பெறுகிறது. தம் சிறு பராயத்தை அவர்கள் மீண்டும் கண்டு மகிழ்கின்றனர். வீடு திரும்புவதில் மகிழ்ச்சி கொண்டனர். மீண்டும் பாடசாலை செல்லும் வாய்ப்பைப் பெற்றனர். சோகத்தின் சாயல் புன்னகையாக மாறி உள்ளது. நாம் இழக்க முடியாதவற்றுள் ஒன்று புன்னகை. நிரந்தர சமாதானம் காண நம்மாலான அத்தனையையும் செய்வோம். இது நம் கடமை.

Save the Children
in Sri Lanka



TVS
INTRODUCING
FIERO F2
ADVANCED BIKING
Now You Have Much More Reason To Smile With Victor
Victor
NEW 4 STROKE
Scootypep
சுசுக்கி ரேடர்ஸ்
TVS
59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
TVS Lanka Private Ltd. இன் அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ். முகவர் 0777-340056/222-6185



HERO HONDA
CBZ
Now with Self-Start
HERO HONDA
World No. 1
Two-Wheeler Company
HERO HONDA
2 Year warranty
RG
கலையம்சத்துடன்
வடிவமைக்கப்பட்ட பைக்
HERO HONDA
PASSION
இரத்தினகோபால்ஸ்
65,63 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
0777-340056 ☎:021-222-6185

## பணியாளர் வெற்றிடம்

**நீண்டகாலமாக கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுவரும் அமைப்பில் கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன.**

1. கணக்காளர்: எச்.என்.டி.ஏ. (H.N.D.A.) அல்லது சமமான தராதரம்
2. பொறியியலாளர்: பீ.எஸ்.சீ. சிவில் [B.Sc. (Eng.)Civil] அல்லது சமமான தராதரம்
3. தச்சுத்தொழிலாளிகள்: (Carpenters)
4. மேசன்மார்: முன் அனுபவத்துடன்
5. தச்சுவேலை, மேசன்வேலை பயிலுநர்களும் விண்ணப் பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு சுயவிவரப் படிவத் துடனும் முன் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுட னும் 25.08.2003 ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்**
எஸ்.எம்.எஸ். எஞ்சினியர்ஸ்
24/3, குமார வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/29425) (26-21-14-19)



## மனோதத்துவ வைத்தியம்
**(GENERAL PSYCHO THERAPY)**
யாழ்ப்பாணத்தில் 12.08.2003 - 17.08.2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரை குறைவு இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம்.

தொடர்புகொள்ளவும்:
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P. ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
**Govt.Regd.No.9492**
**Hot Line: 0777 569205**
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-29388) (21-14-19)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## புஸ்பராசா தனோஜன்

**தோற்றம் 17.10.1994** **மறைவு 12.08.2001**

ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்ட
அன்பு மகனே!
ஈராண்டு கடந்ததையா
ஈரநெஞ்சம் காயவில்லை
பால் வடியும் உன் முகமே
பாவி நெஞ்சில் தெரியுதையா!

பிரிவினால் துயருறும் :
அப்பா, அம்மா, அக்கா, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார்
அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார்,
உற்றார்,உறவினர்கள்.

சிவன் வீதி.
கண்டி றோட். சாவகச்சேரி.

(21194) (14-19)

## பட்டம் வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.12

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ தினங் களில் மகாபாரதம் என்னும் தலைப் பில் தொடர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவன் தமிழ் வேந்தன் 'செஞ்சொற் தமிழ் வித்தகன்' என்னும் பட்டம் வழங்கிக் கௌர விக்கப்பட்டுள்ளார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள், தமிழ்வேந்தனுக்கு பொன்னாடை அணிவித்து பட்டம் வழங்கிக் கௌரவித்தார். (எ)

## வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு

அரியாலை,ஓக.12

யாழ்.குடாநாட்டில் வாழைப் பழத்தின் விலை என்றும் இல்லாத வாறு அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி, மருதனார்மடம் சந்தைகளில் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் கிலோ 40 ரூபா முதல் 60 ரூபா வரை விற்பனை செய்யப் படுவதைக் காணமுடிந்தது.

அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் சூறாவழி காரணமாக வாழைச செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந் தது குறிப்பிடத்தக்கது. (எ-17)

## கல்வயல் பாடசாலையில் வகுப்பறைத் தொகுதி

சாவகச்சேரி,ஓக.12

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் 'நிக்கொட்' அமைப்பின் உதவியுடன் 25 லட்சம் ரூபா செலவில் புதிதாக வகுப்பறைக் கட்டடத் தொகுதி ஒன்று நிறுவப் படவுள்ளது என பாடசாலை அதிபர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.(எ-31)

## கலைவிழா

கைதடி,ஓக.12

கைதடி மத்தி உதயசூரியன் சன சமூக நிலையத்தினால் நடத்தப்படும கலைவிழா எதிர்வரும் 18ஆம் திகதி இரவு 7மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது. (எ-75-ரி)

## சங்க பணியாளர்களுக்கு தங்கப்பதக்கம்

சண்டிலிப்பாய்,ஓக.12

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட் டுறவுச் சங்கம் கடந்த 2அம் திகதி நடத்திய கூட்டுறவாளர் தினவிழாவில் சங்கத்தில் 25வருடகாலம் தொடர்ந்து பணிபுரிந்துவரும் பத்துப் பணியாளர் கள் தங்கப்பதக்கம் அணிவிக்கப் பட்டு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம தலைமையில் நடைபெற்ற இவ்விழா வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி கலந்து கொண்டார். சங்க முன்னாள் பொது முகாமையாளர் இ.இராசசுந்தரம் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ-135)

## கிளிநொச்சியில் உளவள நிலையம்

கொழும்புத்துறை,ஓக.12

கத்தோலிக்க அமைப்பான உள வளத்துணை நிலையத்துக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை கிளிநொச்சியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. இதற்கான காணி கொள்வனவு செய்யப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் ஏற்கனவே இயங்கி வரும் உளவளத்துணை நிலையத் தின் பணிகளை விஸ்தரிக்கும் முகமாகவே இத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக எட்மண்ட் றெஜி னோல்ட் அடிகளார் தெரிவித் துள்ளார். (எ-30)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 - 05 - 1932



உதிர்வு 15 - 07 - 2003

திருமதி
### மனோன்மணியம்மா செல்லத்துரை
திதி: 14.08.2003

அன்புடனும் பாசத்துடனும் எம்மை
பார்த்து வளர்த்து பெற்றெடுத்த தெய்வமே!
காலமெல்லாம் உங்கள் நினைவோடு வாழ்வோம் அம்மா!
*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளைமறுதினம் (14.08.2003) வியாழக்கிழமை எழது இல்லத்தில் நடை பெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:*
*கீதா பேக்கறி.*
*அம்மன் கோயிலடி.*
*கரணவாய் தெற்கு.*
*கரவெட்டி.*

*நிரந்தர முகவரி:*
*சந்தை வீதி.*
*காங்கேசன்துறை.*

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(21179) (21-114-19-26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 01 - 03 - 1906



இறைவன் அடியில் 14 - 07 - 2003

திருமதி
### விசியரத்தினம் பொன்னையா

அன்போடு அரவணைத்து ஆதரவாய் இருந்தீர்!
பண்போடு வாழ்ந்த உம்மை நாம் மறக்கவே முடியாது!!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசனம் ஆகிய நிகழ்வுகள் நாளை (13.08.2003) புதன்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

*அமெரிக்கமிஷன்*
*பாடசாலை ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.*

**- குடும்பத்தினர்.**

(21294) (26-21-14-19)

## நீங்காத நினைவுகளுடன்

**25 ஆம் ஆண்டில்...**



அமரர் Dr. சரவணமுத்து சோமசுந்தரம்
**தோற்றம் : 02.11.1912**
**மறைவு : 27.06.1978**

**18 ஆம் நாளில்...**



திருமதி சோமசுந்தரம் இராசலட்சுமி
**தோற்றம் : 12.03.1924**
**மறைவு : 26.07.2003**

அன்பின் உறைவிடமும் அறிவின் இல்லிடமுமான
எம் அன்புத் தீபங்களே!
மாதா பிதா என்று எம் இதயத்தில்
பதிந்திட்ட எம் தெய்வங்களே!

ஆண்டுகள் பல கடந்தாலும் என்றும் உமைநாங்கள் நினைத்திடுவோம். இறைவன் பாதத்தினில் தூய உள்ளத்தோடு வீற்றிருக்கும் – எம் இதயங்களில் நீங்காத நினைவுகளுடன் – என்றும் உங்கள் பாதங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் Dr. சுந்தரராஜன்.
இல. 2, செட்டித்தெரு, நல்லூர்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உற்றார், உறவினர்கள்.

(21251) (14-19)

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகம்; அதுவே தமிழர்களின் அபிலாஷை

## வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் மகஜர்

யாழ்ப்பாணம்,ஓக.12

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகமொன்று வழங்கப்படுவதே தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும்.

- இப்படி வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின சமாசம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். அவரது யாழ்ப்பாண விஜயம் குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே சமாசம் இப்படித் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 15 ஆண்டுகளின் முன்னர் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் நடத்தப்பட்ட படை நடவடிக்கைகளை அடுத்து உயர் பாதுகாப்பு வலயங்கள் எனப் பலாலி, மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை, ஊறணி, கீரிமலை போன்ற இடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன.

இந்த இடங்களில் வாழ்ந்து வந்த மக்கள் தமது சொந்த வாழ்விடங்களையும், விவசாய நிலங்களையும், கடற்றொழிலுக்கான பகுதியையும், கல்விச்சாலைகளையும், வழிபாட்டுத் தலங்களையும் விட்டு எதுவுமற்ற ஏதிலிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

தற்போது அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நலன்புரி நிலையங்கள் எனச் சொல்லப்படுகின்ற அகதி முகாம்களில் நாம் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றோம்.

எமது நிம்மதியான வாழ்வுக்காக, எமது கோரிக்கைகளை மென்முறைமறியற் போராட்டங்களாகவும், மகஜர்கள் மூலமாகவும், முக்கியமானவர்களை நேரடியாக அழைத்துக் காண்பித்தும் வாய் மூலமாகவும் தெரியப்படுத்தி உள்ளோம். இதுவரையில் எமக்கு சாதகமான தீர்வு எதையும் யாரும் பெற்றுத் தரவில்லை.

முற்றிலும் இராணுவ நலன்சார்ந்த நோக்கில் செயற்படும் அரசின் மனித நேயத்தைப் புறந்தள்ளும் இச் செயற்பாடு வேதனைக்குரியது.

கடந்த 15 மாதங்களிற்கு முன்னர் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் எமது அகதி வாழ்வுக்கு ஒரு முடிவு ஏற்படும் என்றும் நாம் மீளவும் எமது சொந்த இடங்களில் நிம்மதியாக வாழ வழி கிடைக்கும் எனவும் நம்பி இருந்தோம்.

ஆனால், அதற்கு மாறாக எமக்கு அச்சத்தையும் அவலத்தையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் அரசினாலும் அரச படைகளாலும் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால், நாம் அரசு மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழநது வருகின்றோம்.

இடம்பெயர்ந்தோர் என்ற வகையில் அரசிடம் இருந்து எமக்குக் கிடைக்கும் ஒரே உதவி உலர் உணவு நிவாரணம் மட்டுமே. அதுவும்கூட இன்றுவரை எமக்கு ஒரே பெறுமதிக்கே வழங்கப்படுகின்றது. பொருள்களின் விலைகள் உயர்ந்து வரும் போதும், நிவாரண முத்திரையின் பெறுமதி ஒரே அளவிலேயே இருக்கின்றது. இதனால் கிடைக்கும் நிவாரணப் பொருள்களின் அளவுகள் குறைந்துகொண்டே வருகின்றன.

இதனைக்கூட அரசு உணர்ந்து கொள்வதாக இல்லை. நாம் தற்போது இடம்பெயர்ந்து வாழ்வதனாலேயே இந்த உதவியை எதிர்பார்த்து நிவாரணத்தில் தங்கி உள்ளோம்.

எமது சொந்த இடங்களுக்குச் செல்ல எம்மை அனுமதித்தால் வெளி உதவி எதனையும் நாம் எதிர்பார்க்க மாட்டோம். எமது பிரதேசம் செழிப்பும் வளமும் மிக்கது. எமது உழைப்பினாலும் உற்பத்தியினாலும் எமது வாழ்வை நாம் மேம்படுத்திக்கொள்வோம்.

அதற்காகச் சிலவற்றை நீங்கள் எமக்குச் செய்து தரவேண்டும். அவை யாவன:-

- எமது இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ளும் வகையில் இராணுவ நெருக்குவாரங்கள் நீக்கப்பட வேண்டும்.
- நாம் எமது வாழ்விடங்களுக்குச் செல்வதற்கு தடையாக உள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவேண்டும்.

இதன் மூலமே நாம் எமது வாழ்விடங்களுக்குத் திரும்பி மீள் குடியேற்றங்களை மேற்கொள்ள முடியும்.

எமது அடுத்த சந்ததியினரும் தமது பாரம்பரிய - சொந்த மண்ணில் - தமது கல்வி, பண்பாட்டு, பொருளாதார விழுமியங்களைப் பேணி விருத்தி செய்து கொள்வதற்கு ஆயுத படைகளும் அவர்களது இராணுவ நோக்குகளுமே தடையாக உள்ளன. இத்தடைகள் அகற்றப்படாது எக்கால கட்டத்திலும் தங்களைப் போன்ற அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அரச அதிகாரிகளின் விஜயங்களை, வெறும் செயற்பாடற்ற - ஏமாற்றுவதற்கான - சுற்றுலாக்களாகவே கருதுவோம். அத்துடன் இவ்விஜயங்களை இன்னமும் மக்களாகிய நாம் ஏற்றுக்கொள்வதற்குமில்லை.

தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்துப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிறைவாகப் பங்கெடுக்கும் இடைக்கால நிர்வாக அலகொன்று ஏற்படுத்தப்படவேண்டும். அவர்களின் நிர்வாக முறைமையில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவு செய்யப்படும் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம். அவர்கள் மூலம்தான் எமது அவல வாழ்வுக்கு முடிவு கட்டமுடியுமென எதிர்பார்க்கின்றோம்.

எனவே, இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களின் நிம்மதியான வாழ்வை மீளவும் பெற்றுக்கொள்ளத் தக்க வகையில் உரிய அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகளை மனச் சுத்தியுடன் எடுத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- இப்படி அதில் உள்ளது.

(ம-9-6-5-ரி)

# பொலீஸ் ஜீப் விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலி; 9 பேர் படுகாயம்!

சப்பிரகமுவ பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலீஸாரை ஏற்றிய ஜீப் ஒன்று கம்பஹா உடுகம்பொல பகுதியில் விபத்துக்குள்ளானதில் ஒரு பொலீஸ்காரர் கொல்லப்பட்டார்; வேறு ஒன்பது பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஐந்து பொலீஸார் கம்பஹா வைத்தியசாலையிலும், மூன்று சிவிலியன்கள் உட்பட நால்வர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

பொலீஸ் ஜீப் பாதையை விட்டு விலகி மரமொன்றில் மோதியதாலேயே இந்த விபத்து நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சப்பிரகமுவ பிராந்தியத்தைச் சேர்ந்த இப்பொலீஸார் கம்பஹா பகுதிக்கு எதற்காக வந்தார்கள் என்பது பற்றியோ அல்லது சிவிலியன்கள் எதற்காக ஜீப்பில் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்பது பற்றியோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அதிகாரபூர்வமற்ற ஒரு பயணத்தையே இப்பொலீஸார் மேற்கொண்டிருந்தனர் என்று பொலீஸ் தகவல்கள் கூறுகின்றன.

விபத்து நடைபெறுவதற்கு முன்னர் பொலீஸார் ஹோட்டல் ஒன்றின் பணியாளர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் எனவும் - துப்பாக்கிகளைக் காட்டி பணியாளர்களைப் பயமுறுத்தினர் எனவும் - கூறப்படுகிறது.

இவ்விபத்துக் குறித்து கம்பஹா பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

# தலைவர் பதவிக்கு அலிக்கானின் பெயர் ஏகமனதாக சிபாரிசு

புத்தளம் நகர சபையின் புதிய தலைவராக முஸ்லிம் காங்கிரஸ் நகரசபை உறுப்பினரான ஏ.ஓ.அலிக்கான் நியமிக்கப்படவேண்டும் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற புத்தளம் நகர முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுக்கூட்டத்திலேயே இத் தீர்மானம் நிறைவேறியது. முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

கே.எம்.பைருஸை நகரபிதாவாக நியமிக்க உத்தேசித்திருக்கப்பட்டிருக்கையில், வேட்பாளர் பட்டியலில் பெயர் இல்லாத ஒருவரை நகரபிதாவாக நியமிக்கமுடியாது எனக் கூறி மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை தெரிந்ததே.

மத்திய குழுவின் தீர்மானம் கட்சியின் தலைமைப் பீடத்துக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்படும் என்று மத்திய குழு இணைச் செயலாளர் எம்.ஆர்.அயூர்தீன் தெரிவித்தார்.(எ)

# யாழ். பல்கலை. ஊழியர்கள் இன்றுமுதல் வேலைநிறுத்தம்

நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இன்றுமுதல் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களை தனியார் மயப்படுத்துவதற்கு அரசு எடுக்கும் முயற்சியைக் கண்டித்தும் - சேவை மூப்புக்கேற்ப பதவி உயர்வு வழங்குதல், அமைய அடிப்படையில் பணிபுரிவோரை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுத்தல், ஊழியர்களுக்கான இடர்கடனுக்கு நிதி வழங்குதல், 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு விசேட விடுப்பு வழங்குதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தும் -

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் சம்மேளனம் இந்தத் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளது.

இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் இன்றுமுதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களில் அத்தியாவசிய தேவைகளான நீர்வழங்கல், பாதுகாப்புப் பிரிவு ஆகிய பிரிவுகளில் கடமையாற்றுவோர் தவிர்ந்த ஏனையோரை இன்று காலை 9,00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்திற்கு முன் ஒன்றுகூடுமாறு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.(ஒ-5)

# தமிழர் உரிமைக்காய் ஓயாது குரல்கொடுத்த மாமனிதர் குமார்

**மாமனிதர் அமரர் குமார் பொன்னம்பலத்தின் 65ஆவது பிறந்ததினம் இன்றாகும். அதனை முனனிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

**1983**ஆம் ஆண்டுக் கலவரங்களின் பின்னைய காலம்.... இலங்கை அரசு 6ஆம் திருத்தச் சட்டத்தினைக் கொண்டுவந்து தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை வேரறுத்த நேரம், பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற அரக்கத்தனமான விதிகளுடன்கூட கொடிய யுத்த மேகங்கள் சூழ்ந்து ஆக்கிரமித்து தமிழ் மக்களை அச்சுறுத்தத் தொடங்கிய நேரம்....

தமிழ்மக்களின் குரல் மெல்ல மெல்லத் தேய்ந்து ஓய்ந்தது. அச்சம் அவர்களை விழுங்கிக்கொண்டது. இவர்கள் இவ்வாறு செயலிழந்து நின்றதுதான் தாமதம், அதனை உபயோகித்து, இந்த யுத்தம் தமிழ் மக்களை 'விடுவிப்பதற்கு' அவசியமானதும் அவர்களால் வேண்டப்படுவதும் எனப் பறைசாற்ற முயன்றது தென்னிலங்கையில் சிங்கள தலைமைத்துவம். இதன் விளைவாக ஊரும் உலகமும இலங்கையில் நிகழ்ந்த யுத்தக் கொடுமைகளைக் கண்டும் காணாமல் நின்ற போது, தனியே ஒரு கர்சனை தமிழ் மக்கள் மத்தியில் இருந்து எழலாயிற்று. வடக்கு - கிழக்குப் பிரதேசமானது தமிழர் தாயகம், தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என அது அவர்கள் சுயநிர்ணய உரிமையினை நாடு பூராவும் கேட்க முழங்கிற்று. நடைபெறுவது வெறும் யுத்தமல்ல, அது தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டமே என ஆர்ப்பரித்தது. 'சிங்கத்தின் குகைக்குள்ளேயே ஒலிக்கத் தொடங்கிய அக்குரலுக்கு உரியவர்தான் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

தமிழ்மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் இக்'குகை'யில் குமார் பொன்னம்பலம் வகித்த பாத்திரம் மகத்தானது. இப்போராட்டத்தின் இரட்டைக் கிளைகளான இராணுவம், அரசியல் என்ற இரு போக்குகளில் தென்பகுதியின் அரசியல் தலைமைத்துவம் மத்தியில் அரசியல் கிளையினைத் தாங்கி நின்ற தனியொருவராக இவர் திகழ்ந்தார். தமிழர் பிரச்சினையினைப் பயங்கரவாதத்துடன் சம்பந்தப்படுத்தி அதனை யுத்த களத்துக்குள் மட்டுமே ஒதுக்கி ஒடுக்க நினைத்த தென்பகுதி அரசியல்வாதிகளுக்கும் அறிவுஜீவிகளுக்கும், அவர்கள் மத்தியிலேயே நின்று கொண்டு, வாக்குநேர்மையும் அஞ்சா நெஞ்சமும் மட்டுமே ஆயுதங்களாகத் தரித்து, விட்டுக் கொடுக்காது போராடிய போராளியாகிப் பெரும் சவாலாக மிளிர்ந்தார்.

இச்சாதனையை குமார் அநாயாசமாகச் சாதித்த பொழுதும், இதன் விளைவாக அவர் வாழ்க்கையில் சந்தித்த எதிர்ப்புக்களும் அச்சுறுத்தல்களும் எண்ணிலடங்கா. தமிழர்களுக்கோ'ம்' என்றால் சிறைவாசம் என்னும் நிலை. தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் எவ்விதத்திலும் ஆதரவாயுள்ளார்களெனில் அவர்களை அப்புறப்படுத்த ஏதுவான சட்டங்களும், வேண்டுமெனில் இச்சட்டங்களிற்குக் கூட அப்பாற்பட்ட முறையில் செயலாற்றக் கொடிய ஆயுதக் குழுவினரும் வேரூன்றியிருந்த சூழல். இங்கு சிங்கள இராணுவம் மட்டுமல்ல சிங்கள சமூகமுமே தமிழர்களைப் புலிகள் என்று பச்சை குத்தி எங்கே தட்டிவிடலாம் எனத் தேடித் திரிந்த களம்.



இதற்கு நடுவில் நின்று 'நான் விடுதலைப் புலிகளுடைய அரசியல் சித்தாந்தத்தை ஆதரிக்கிறேன்' என்று கர்ஜித்தல் எங்ஙனம்? ஆனால், 'என்ன தான் நடந்தபோதும் நான் எனது மனச்சாட்சிக்கு நேர்மையாகத்தான் உள்ளும் புறமும் நடப்பேன்' என்ற சங்கல்பத்துடன் குமார் இப்படியே இயங்கிய பொழுது, அவரை நோக்கி அவதூறு கூறும் தொடர்பூடக விமர்சனங்களும், அச்சுறுத்தல் கடிதங்களும் தொலைபேசி அழைப்புக்களும் வந்து குவிந்தன. இவர் பின்வாங்கினாரில்லை. தமிழ மக்கள் பகிரங்கமாகக் கூறவும் எழுதவும் பயந்து கிடந்த விடயங்களை அஞ்சாமல் வெளிக்கொணர்ந்தார். சந்திரிகா அரசு விடுதலைப் புலிகள் அமைப்பினைத் தடைசெய்து, இவர்களுக்கு ஆதரவாகப் பேசி செயற்படுபவர் எவரோ அவருடைய சொத்து பறிமுதல் செய்யப்பட்டு சிறைவாசம் வழங்கப்படும் என்று பிரகடனம் செய்த பொழுதும் இவர் பயப்படாமல் தொடர்ந்தார். தன் இறுதி மூச்சுவரை தமிழ் மக்களின் உரிமைகளுக்காகதான் ஆற்றக் கூடிய பங்களிப்பு எதுவானாலும் அதனைச் செய்யவேண்டுமென்ற அவர் உறுதி ஒரு கணமும் நெகிழவில்லை.

ஒவ்வொரு தடவையும் அவருடைய கட்டுரைகள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட போதும், அவர் தொலைக்காட்சியில் செவ்வி காணப்பட்ட போதும் நூற்றுக்கணக்கில் தமிழ் மக்கள் அவருடன் தொடர்பு கொண்டு தாங்கள் சொல்ல நினைத்ததையும் சொல்ல வேண்டியவற்றையும் சொன்னதற்காகப் பாராட்டுத் தெரிவித்தனர். தாங்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்த விரக்தியினைக் குமார் தீர்த்து வைத்தாரெனப் புளகாங்கிதம் கொணடனர். அவருடைய தைரியமும் துணிவும் ஏனைய தமிழ்மக்களுக்கு உத்வேக சக்தியைக் கொடுக்கலாயிற்று. தமிழ்மக்களின் மீது கட்டவிழ்க்கப்பட்ட பயங்கரவாதம் 1990களில் அதிகரித்துக் கொண்டே வந்தபோதும், தலைநகரில் பலதமிழ் அமைப்புக்களும் அரசியல் கூட்டங்கள் நடத்த ஆரம்பித்தது குமார் தந்த துணிவினாலேயே என்றால் மிகையாகாது. அவர் முன் வரிசையில் எதிர்ப்பு வெடிகளைத் தாங்கிப் பாதுகாப்பாக'நிற்கின்றார் என்ற தைரியத்தில் அவர் பின்னே அணி வகுத்தவர் எத்தனையோ பேர். குமார தனியொருவராக தென்னிலங்கைத் தமிழ்மக்களுக்கு அவர்களின் ஒரே கவசகேடயமாக விளங்கினார். இன்றோ தங்களுக்கு ஏவப்படும் கணைகளைத தாங்க முன்னே குமார் இல்லையென்றவுடன் வியூகம் அமைத்த எதிரியின் நாற்படையின் நடுவே வெற்றுத் தோளுடன் நிற்கும் காலாட்படையெனக் கலங்குகிறது தமிழ்ச் சமூகம்.

பொதுவாகத் தமிழ்ச் சமூகத்துக்கே ஒரு தூணாய் இருந்தது மட்டுமல்ல. தனிப்பட்ட ரீதியிலும் தமிழ்மக்களுக்கு குமார் உறுதுணையாக இருந்தார். தலைநகரில் கண்மண் தெரியாது நடைபெற்ற கைதுகளில் தமது சுற்றத்தவர்கள் எவரும் கைது செய்யப்பட்டால் குமாரின் நண்பர்களுக்கும் அவருடன் உறவானவர்களுக்கும் அவரை சிறிதளவேனும் தெரிந்தவர்க்கும், 'கூப்பிடு குமாரை' என்பதே தாரக மந்திரமாயிற்று. அப்படியே அழைத்த குரலுக்கு ஓடி வந்தவர் அவர். பொலீஸ் காவலிலிருந்து விடுவிப்பதெனினும், நீதிமன்றத்தில் வழக்காடி விடுதலை தேடித் தருவதெனினும், பேதம் நோக்காது யாவருக்கும் அவர் முன்னின்று உழைத்தார். இன்று நாம் சுதந்திரமாகத் திரிவது குமார் செய்த உதவியாலேயே என்ற நன்றிக் கடனில் உருகும் உள்ளங்கள் எத்தனையோ எத்தனையோ. அவை கணக்கிலடங்கா. ஆனால், இவ்வளவு உதவிகளுக்கும் அவர் ஒரு சன்மானமும் பெறவில்லை. ஒரு கைம்மாறும் எதிர்பார்க்கவில்லை. அவரின் இழப்பு, தமிழர் அரசியல் வானில் மட்டுமல்ல, ஏராளமான மக்களின் வாழ்விலும் நிரப்ப முடியாததொரு வெறுமையைத் தோற்றுவித்திருக்கிறது.

**- தமிழர் செயற்பாட்டுக்குழு.**

# 53 ஹர்த்தாலைவிட சக்திவாய்ந்த போராட்டம் நடத்தினாலேயே மீட்சி!

## நாட்டை சுபீட்சப் பாதையில் இட்டுச்செல்ல வேறுவழி இல்லை

**1953 இல் இலங்கையை உலுக்கிய ஹர்த்தால் போராட்டத்தின் 50 ஆவது நிறைவுதினம் இன்றாகும். இத்தினத்தையொட்டி புதிய இடதுசாரி முன்னணி கொழும்பில் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.**

1953ஓகஸ்ட் 12ஆம் திகதி நடந்த ஒருநாள் ஹர்த்தால் இலங்கையைக் குலுக்கி கொழும்பைக் கலக்கியது. அந்த மகத்தான ஹர்த்தால் 10 நாள்கள் நீடித்திருந்தால், இலங்கையின் வரலாறு முற்றிலும் வேறாக அமைந்திருக்கும்.

அந்த ஒருநாள் ஹர்த்தால் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக அன்று பதவியிலிருந்த டட்லி சேனநாயக்க அரசாங்கம் செய்வதறியாது திகைத்தது; பின்வாங்கி கடலை நோக்கி ஓடியது. கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நின்ற 'நியுபவுண்டன்ட்' கப்பலில் மந்திரி சபைக்கூட்டத்தினை நடத்தியது.

1948 இல் இலங்கை 'சுதந்திரம்' அடைந்ததும் ஐக்கிய தேசியக்கட்சி (ஐ.தே.க) டி.எஸ். சேனநாயக்கா தலைமையில் ஆட்சி பொறுப்பேற்றது. அந்த அரசாங்கத்தில் டி.எஸ்.இன் மகன் டட்லி சேனநாயக்கா, எஸ்.டபிள்யு..ஆர். டி. பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜயவர்த்தன, சேர் ஜோன் கொத்தலாவல மற்றும் ஏனையோர் அமைச்சர்களாயிருந்தனர்.

தனக்கு அடுத்த மூப்புரிமை பண்டாரநாயக்காவுக்கு இருந்தும் மகன் டட்லிதான் தனது இடத்தினை நிரப்ப வேண்டுமென டி.எஸ். ஏற்கனவே அன்றைய தேசாதிபதி சோல்பரி பிரபுவுடன் திட்டம் தீட்டியிருந்தார்.

பண்டாரநாயக்காவை ஓரங்கட்டி அந்நியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டிருந்தன. இவற்றினால் விரக்தியடைந்த பண்டாரநாயக்கா ஐதேகவை விட்டு வெளியேறி 1951 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை (ஸ்ரீ.ல.சு.க) ஆரம்பித்தார்.

டி.எஸ். சேனநாயக்கா 1952இல் குதிரையால் சறுக்கி வீழ்ந்து மரணித்தவுடன் டட்லி சேனநாயக்காவே பிரதமர் பதவியில் அமர்த்தப்பட்டார். ஜே.ஆர். ஜயவர்த்தனவே அன்று நிதி அமைச்சராயிருந்தார்.

'முதலாளித்துவத்தின் பிரதம குருக்கள்' என அழைக்கப்பட்ட ஜயவர்த்தன கொஞ்சமும் கூசாமல ஏழை எளிய உழைக்கும் மக்களின் வயிற்றில் அடிக்க முற்பட்டார்.

அதாவது, 25 சதமாயிருந்த ஒரு படி அரிசியின் விலையை 75 சதமாக அதிகரித்தார். சீனி போன்ற அத்தியாவசிய பண்டங்களின் விலைகளும் உயர்த்தப்பட்டன. அன்றைய 25சதம இன்றைய 25ரூபாவுக்கு சமனானது.

19.07.1953 இல் விலையுயர்வு அறிவிக்கப்பட்டு ஓரிரு நாள்களில் மக்கள தாமாகவே கிளர்ந்தெழுந்தனர். தென் மாகாணத்திலேயே போராட்டங்கள் ஆரம்பமாகின.

லங்கா சமசமாஜக் கட்சி போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியது. நாட்டின் பல பாகங்களில் ஆர்ப்பாட்ட கூட்டங்கள் நடத்தப்பட்டன. இலங்கைத தமிழரசுக் கட்சியும் இப்போராட்டத்தில் பங்குபற்றியிருந்தது.

என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர். டிசில்வா, லெஸ்சி குணவர்த்தன, எஸ். ஏ.விக்ரமசிங்க, எம்.ஜீ.மென்டிஸ், பிலிப்றெபேட் குணவர்த்தன சகோதரர்கள் போன்றோர் முன்னணியில் நின்றனர்.

### காலிமுகத்திடலில்

1953 ஓகஸ்ட் 11 ஆம் திகதி காலி முகத்திடலில் மாபெரும் எழுச்சிக கூட்டம் இடம்பெற்றது. அக்கூட்டத்துக்கு தலைமை தாங்குவதற்கு ஸ்ரீ.ல.சு.க. தலைவர் பண்டாரநாயக்கா அழைக்கப்பட்டார்.

அடுத்தநாள் 12 ஆம் திகதி கொழும்பிலும் மற்றும் பல பகுதிகளிலும் வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன. அன்று போக்குவரத்து அமைச்சராயிருந்த சேர் ஜோன். கொத்தலாவல அந்த பரந்துபட்ட ஹர்த்தால் போராட்டத்துக்கு மறைமுகமாக ஆதரவளித்திருக்கிறாரா என்று பலர் எண்ணியதும உண்டு.

போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதிக அளவில் வேலைநிறுத்தத்தில் குதித்ததால ஏற்பட்ட ஐயம் இது!

அன்றைய மிகப்பெரிய போக்குவரத்து நிறுவனமும் சேர் சிறில் டி. சொய்சாவுக்குச் சொந்தமானதுமான தென்மேற்கு பஸ் கம்பனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றினர். சிறில் டிசொய்ஸா அதைக்கண்டும் காணாததுமாய் இருந்தார்.

வேறுசில பஸ் கம்பனிகள் பஸ் சேவைகளை நடத்துமுற்பட்டன. அதனால், பலத்த மோதல்கள் ஏற்பட்டன. எனவேதான் நிலைமை கொந்தளிப்படைந்த கட்டத்தில் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தலைபட்டனர்.

கொழும்பு புறக்கோட்டையில் எட்வின் எனும் தொழிலாளி துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். தென்னிலங்கையில் மேலும் சிலர் பலியாகினர்.

### டட்லி பதவி துறப்பு

ஹர்த்தால்போராட்டம் ஒரு நாளோடு நிறுத்தப்பட்டது. போராட்டம் தொடர வேண்டுமென பொதுவாக உத்வேகம் காணப்பட்டபோதும்,அதற்கான திட்டமற்ற நிலையில்12 ஆம் திகதியுடன் அந்த வரலாற்று நிகழ்வு முற்றுப் பெற்றது.

போராட்டத்தின் தாக்கத்தினால் நிலை தடுமாறியிருந்த பிரதமர் டட்லி சேனநாயக்க ஒரு வார காலமாக வெளியில் தலைகாட்டவில்லை.

அவர் எங்கே என்று அன்று வவுனியா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சுந்தரலிங்கம் நாடாளுமன்றத்தில் வினா எழுப்பினார்.

உடற்சோர்வு காரணமாக பிரதமர் டட்லி ஒருவாரம் ஓய்வெடுக்கிறார் என்று சேர் ஜோன் கொத்தலாவல பதிலளித்தார்.

டட்லி சில நாள்கள் ஒதுங்கியிருந்த பின் பதவிதுறந்தார். அதனைத் தொடர்ந்து சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராகப் பதவியேற்றார்.1950 ஆம ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.க பலத்த தோல்வியைத்தழுவியது.

அன்று பிரதமர் பதவியை எட்டிப் பிடிக்க துடித்துக்கொண்டிருந்த பண்டாரநாயக்கா, ஹர்த்தாலின் பயனை அறுவடைசெய்து கொண்டார்.1956 பொதுத் தேர்தலுக்குச் சிறிதுகாலத்துக்கு முன்பதாக ஐ.தே.கவை குட்டி, முந்திக்கொண்டு, "24 மணித்தியாலத்தில தனிச்சிங்களம்" என்ற சுலோகத்தினை முன்வைத்து தேர்தலைச் சந்தித்தார் அவர்.

விசேடமாக 1953 ஹர்த்தால் போராட்டத்தினால் ஏற்பட்ட ஐ.தே.க விரோத நிலைமையைப் பயன்படுத்தி பண்டாரநாயக்கா தேர்தலில் வெற்றியீட்டி பதவிக்கு வந்தார்.

பதவிக்கு வந்து இரண்டே இரண்டு மாதங்களில்(05.06.1956) தனிச் சிங்களச் சட்டத்தை இடதுசாரிகளின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியில் நிறைவேற்றினார் அவர்.

அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் இன அழிப்புகள், கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள், 20 வருட கால யுத்தத்தின் விளைவுகள் யாவும் வரலாறு.

### 5 தசாப்தங்களுக்குப் பின்

நாட்டினை 5 தசாப்த காலமாக உலுக்கிய தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இன்றைய முன்னெடுப்புகளின் படிமுறையாக வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பாகவும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

பௌத்த குருமார்களும் வீதிக்கு வந்துள்ளனர். போலி இடது சாரியான ஜே.வி.பியின் கூக்குரல் அனைவருக்கும் நன்கு தெரிந்ததுதான்.

அதிகாரப் பகிர்வு, இடைக்காலநிர்வாகம் ,சமஷ்டி முறை என்ற சொற்களே ஜே.வி.பி அகராதியில் இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையை விடுத்து, ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக கொண்ட சமஷ்டி முறையில் தீர்வுக்கு தாம் சித்தமாயிருப்பதாக சென்ற வருடம் நவம்பரில் தெரிவித்தபோது தென்னிலங்கையிலும் குறிப்பிடத்தக்க நிம்மதிநிலை தோன்றியது.

ஆனால், இடைக்கால நிர்வாகம் தனிநாட்டிற்கு இட்டு சென்றுவிடும்; நாட்டின் இறைமைக்கு பங்கம் வந்துவிடும் என்றெல்லாம் பேரினவாதிகள் கூக்குரல் இடுகின்றனர். உண்மையில் நாட்டின் இறைமை ஏற்கனவே அந்நிய சக்திகளின் கைக்கு மாறியுள்ளதை அவர்கள் உணராமல் இருப்பது மிகப் பரிதாபமானதாகும்.

பிளவுபட்டிருக்கும் நாட்டை ஐக்கியப்படுத்தி கைநழுவியுள்ள இறைமையை மீட்பதுதான் இன்றைய பிரதான பணியாகும்.

"இலங்கையை மீளப்பெறல்" எனும போலித் திட்டத்தின் கீழ் செல்வந்த நாடுகள், நிறுவனங்கள் 450 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளன.

நாட்டு வளங்கள் தனியார்மயம், தாராளவாதம் போன்ற உலகமய முதலாளித்துவத்தின் தாரக மந்திரத்திற்குள்ளாகி இவை அபகரிக்கப்படுகின்றன.

இதனைத்தான் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக ஸ்தாபனம் ஆகிய ஏகாதிபத்திய முகவர் நிறுவனங்கள் ஈவிரக்கமின்றி செய்து வருகின்றன.

**வ.திருநாவுக்கரசு**
**(புதிய இடதுசாரி முன்னணி)**

எனவே, மேற்படி நிறுவனங்கள் கைப்பற்றியுள்ள நாட்டின் இறைமையை மீட்டு நாட்டை சுபீட்ச பாதையில் இட்டுச செல்வதற்கு 1953 ஹர்த்தாலைக் காட்டிலும் பன்மடங்கு சக்திவாய்ந்த போராட்டங்கள் நடத்தப்படவேண்டும்.

- இதனைக் கிணற்றுத் தவளைகள் போல் நடந்துகொள்ளும் சக்திகள உணரத் தலைப்படுவதுதான் நாட்டிற்கு செய்யும் நன்மையாகும்.

எதிர்காலப் போராட்டங்களை விடாப்பிடியாக நடத்துவதற்கு இடதுசாரிகள் ஒன்றுபட்டு முன்னணியில் நின்று செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி



மண்ணில் 11 - 10 - 1925

விண்ணில் 24 - 07 - 2002

திருமதி

### இராஜபாக்கியம் சின்னத்தம்பி

திதி: 12.08.2003

ஆறாத நினைவுகளில் நாமிங்கு - அம்மா!
நூலாக இளைத்து நிற்க பாதை மாறி,
உயிர்ப்பறவை கூடிழந்து காலன் அவன் வீசிய
வலையில் அகப்பட்டு இனிதே பறந்து விட்டீர்கள்!
பூவுலகப் புயல் வாழ்வு இனிப்போதும் என்று
நீர் மேலுலகம் சென்றீரோ மேன்மையுடனே?
அரனடியில் ஆழ்ந்துறங்க, அமைதி பெற்று
ஆத்மசாந்தியடைய அவனருளை அன்பாக வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்.

*'மூப்பியாவளவு',*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*

(21316) (26)

## படலை திருட முயன்றோர் தப்பிஓட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.12

சுண்டுக்குழிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் வாயில் படலையை கழற்றிச் செல்ல முயன்றோர் அயல்வீட்டார் விழித்துக் கொண்டதை அடுத்து தப்பி ஓடினர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக் கிழமை இரவு 11.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பாடசாலை மாணவர்கள் எனக் கூறப்படும் நால்வர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (எ)

## பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.12

தீவகத்தில் வசிக்கும் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை ஊர்காவற்றுறை பொலீஸ் நிலைய தலைமைப் பொலீஸ் அதிகாரியிடம் வேலைநாளகளில நேரில் வந்து தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு நேரில் சென்று முறைப்பாடு செய்யமுடியாதவர்கள் தினமும் காலை 10 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலும் -

மாலை 6.30 மணிக்குப பின்னரும் தொலைபேசி மூலம் 021-222 2090 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்று ஊர்காவற்றுறை தலைமைப் பொலீஸ் அதிகாரி எஸ்.வீரசிங்க அறிவித்துள்ளார். (எ-10)

## வேடுவர் பிரச்சினை தீர்க்க அரசு அதிகூடிய அக்கறை

கொழும்பு,ஓக.12

மகியங்கனைப் பிரதேசத்தில் உள்ள வேடுவர் இனத்தவர்கள் எதிர்நோக்குகின்ற காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கூடிய அக்கறை செலுத்தப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

வேடுவத் தலைவர் ஊறுவரிக்கே வனிலா எத்தன் விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. வேடுவத் தலைவர், மத்திய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் ஆகியோரிடம் தமது பிரச்சினைகளைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மாதுறு ஓயா வனப பகுதியில் வேடுவர்கள் நடமாடுவதற்கு அனுமதி வழங்குவது குறித்தும் -

வகுரகண்டிய குளப்பகுதியில் 3 ஆயிரத்து 500 ஏக்கர் காணி ஒதுக்குவதுகுறித்தும் - கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாக அரசு 3 மாதங்களுக்குள் ஆராய்ந்து முடிவு மேற்கொள்ளும் என்றும் .தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சர்வதேச வேடுவர் தினத்தையொட்டி தம்பானையில் கலாசார நிலையம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. (ஓ-ரி)

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை கந்தையா

(ஓய்வுபெற்ற பெருந்தோட்ட - உத்தியோகத்தர் - தெமோதரை)

வேளாவை அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (11.08.2003) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆசிரியர்களான சுப்பிரமணியம், சுந்தரம்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தம்பியும் தங்கேஸ்வரி (லண்டன்), கதிரமலைநாதன் (கனடா), நாகேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற இலங்கேஸ்வரி (பிரான்ஸ்) மற்றும் நித்தியானந்தன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஞானேஸ்வரி (கனடா), மங்களேஸ்வரி (கனடா), குகநாதன் (கொழும்பு), சிவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கெங்காதரன் (லண்டன்), ஸ்ரீசாந்தினி (கனடா), யோகநாதன் (கொழும்பு), நந்தகுமார் (பிரான்ஸ்), ராதா, சுகுமார் (கனடா), மகேஸ்வரன் (கனடா), ராகுலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தாரணி, துளசி, சோபனா, லவன், விபூஷன், அபினா, ஆரணி, சாயிகரன், சாயினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2003) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நித்தியானந்தன் (மகன்)
*யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி*

*ஆசிரியர் வீதி,*
*பெரியரசடி, சாவகச்சேரி,*

(21314) (26-19-17)

# 'சிஹல உறுமய' கட்சியைப் போன்று எம்மவருள் சிலரும் இயங்குகின்றனர்

## ரவிராஜ் எம்.பி. விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.12

எமது மக்களில் சிலர் 'சிஹல உறுமய' கட்சியினரைப் போன்று தீவிர வாதப் போக்குடன் செயற்பட முனைந் தால் சமாதான முயற்சிகள் குழம்பிப் போய்விடும் - இப்படித் தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் ந.ரவிராஜ்.

உள்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தலைமையிலான குழுவினரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் களினைச் சமர்ப்பிப்பதற்காக பாதுகாவ லர் சங்கப் பிரதிநிதிகளும் வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசப் பிரதிநிதிகளும் யாழ். செயலக முன்றலில் நேற்றுமுன் தினம் கூடியிருந்தனர். அவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தியபோதே ரவிராஜ் எம்.பி. மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வந்தவர்களை வரவேற்று உப சரிப்பது எமது தமிழ்மக்களின் பண் பாடாகும். அந்த பண்பாட்டுக்கு பழுது ஏற்படுத்தும் வகையில் புதிய காய்ச் சல் ஒன்று பரவி வருகிறது. 'ஈழத்தமி ழின மாணவர் மன்றம்' என்ற பெய ரில் அநாமதேய அறிக்கைகள் வெளி வருவதனை எமது சமூகம் தொடர்ந் தும் அனுமதிக்கப் போகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.



இடம்பெயர்ந்த மக்களின் கோரிக் கைகளோ, காணாமற்போனவர்களின உறவுகளின் கோரிக்கைகளோ மிக வும் பாரதூரமானவை. அவை எமது சமூகத்தின் பொதுப் பிரச்சினைகள். அவை தொடர்பில் போராட்டம் நடத்து வதற்கு எமது மக்களுக்கு பூரண உரிமையுண்டு.

ஆனால், போராட்டம் என்ற போர் வையில் எழுந்தமானமான செயற்பாடு களையெல்லாம் நாம் நியாயப்படுத்தி விடக் கூடாது. யதார்த்த நிலையை அறிந்து செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினையில் கடந்த காலங்களில் கத்தோலிக்கத் தலைவர்கள் எப்படிச் செயற்பட்டார் கள் என்பதனை நினைத்துப் பார்க்க வேண்டும். அவை குறித்து அறியாமல் அறிக்கை விட்டுக் கொண்டிருத்தல் கூடாது.

இடம்பெயர்ந்து கடந்த 15 வருட காலமாக எமது மக்கள் அனுபவித்து வரும் துயரங்கள் ஏராளம். எனினும், இவ்வளவு காலமும் பொறுமையோடு இருந்தீர்கள். வெறும் 15 மாதத்துக் குள் அந்த நீண்டகாலத் துயரங்கள் அகன்றுவிடுமா? சிறிது கால அவகா சம் தேவைப்படுமல்லவா?

இன்றுவரை எந்வொரு அமைச்ச ரும், புலிகளுக்கு இடைக்கால நிர் வாக அமைப்பு வழங்கப்படுவதனை எதிர்க்கவில்லை. இடைக்கால நிர்வா கம் புலிகளிடம் வழங்கப்படுகையில் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும்.

எமது பிரச்சினைகளை வருகை தரும் அமைச்சர்களிடம் நேரடியாக முறையிடலாம் அதற்குரிய சந்திப்புக் கான ஏற்பாடுகளை நாம் மேற் கொண்டு தரமுடியும்.

கோப்பாய் பிரதேசத்தில் 40 பரப்புக் காணியில் 10 வீடுகள் பொலீ ஸார் வசமுண்டு. மற்றும் அசோஹா ஹோட்டலிலும் யாழ். பொலீஸ் நிலை யம் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றை அகற்றுவது தொடர்பில் பேசவே நான இங்கு வருகை தந்தேன். பொலீஸ் பதிவை பொலீஸார் கேட்டால் கிழித் தெறியச் சொல்லி தமிழ்மக்களுக்கு சொன்ன அமைச்சர் இந்த ஜோன் அமரதுங்க என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் சுமார் ஆயிரத்து 400 தமிழ் அரசியல்கைதிகள் சிறையிலிருந்தனர். இன்று வெறும் நூறு கைதிகள் வரை யிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ள னர். இதுவே முன்னேற்றகரமான நிலைமை ஆகும். எவ்வாறாயினும், காணாமற்போன உறுப்பினர்கள் எவ ரும் உத்தியோகபூர்வமாக சிறைகளில் இல்லை என்பதனை பாதுகாவலர் சங்க பிரதிநிதிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனவே, எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? உயிரிழந்து விட்டால் அவர்களைக் கொன்றவர்கள் யார்? கொன்றவர்களுக்கு சட்ட நடவடிக்கை என்ன? பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு என்ன? போன்ற விவரங்களை உள் ளபடி கோருவதற்கு எமக்கு சகல உரி மையும் உண்டு - இப்படி ரவிராஜ் எம்.பி. கூறினார்.

(எ-9-6-5-ரி)

# மேஜர் கிண்ணி நினைவாக நாகர்கோவிலில் நினைவாலயம்

வடமராட்சிகிழக்கு,ஓக.12

விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீரர் மேஜர் கிண்ணியின் நினை வாக நாகர்கோவிலில் அமைக்கப்பட்ட நினைவாலயம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மாலை 4 மணியளவில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப் புத் தளபதி லெப்டினன்ட் கேணல் நகு லன் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

பொதுச்சுடரினை தளபதி நகுலன் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை வடமுனைக்கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றி வைத் துள்ளார்.

தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டி ருந்த மாவீரர்களின் திருவுருவப்படங் களுக்கு வட போர்முனைக் கட்டளைத தளபதிகளில் ஒருவரான தளபதி முகுந தன், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை யணியின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான பல்லவன் ஆகியோர் மலர் மாலைகளை அணிவித்தனர்.

தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப் புப்படையணியின் கொடியினை தள பதி லெப்டினன்ட் கேணல் கோவிக் ஏற்றி வைத்தார்.

மாவீரர் மேஜர் கிண்ணியின் நினைவு மண்டபப் பெயர்ப் பலகையை வடமுனைக் கட்டளையகத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் அறிவு திரை நீக்கம் செய்து வைத்தார்.

மண்டபத்தினை தளபதி லெப்டி னன்ட் கேணல் வீரமணி திறந்து வைத்தார்.

மாவீரர் மேஜர் கிண்ணியின் திரு வுருவப்படத்திற்கு அவரது தாயார் ஈகச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து அங்கு பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-12)

# ஒவ்வொரு மனிதனதும்.....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனை உருவாக்குவதே எமது தலை வரின் நோக்கம். அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே நாம் தமிழீழமெங் கும் தேசிய எழுச்சிப் பேரவையை கட்டியெழுப்பியுள்ளோம்.

இன்று நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், யாழ்ப்பாணத்தில் 40ஆயிரம் படை கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. எமது மக்களின் நாளாந்த வாழ்வை ஒரு பெரிய நெருக்கடிக்குள் தள்ளியிருக் கிறார்கள்.

நாங்கள் பொறுமை காக்கிறோம், இயலுமானவரை தொடர்ந்தும் பொறுமை காப்போம். எங்களுடைய அடிப்படை வாழ்வு நிலையை மறுக் கின்றன படைகள், இவற்றையெல்லாம் துணிவோடு நீங்கள் தட்டிக் கேட்க வேண்டும். ஒவ்வொரு மக்களினதும் அரசியல் உரிமைகளைத் தட்டி எழுப் புங்கள்.

குடாநாட்டுக்குள் புலிகள் நுழை யும் போது அங்கு கலாசாரம் சீரழிந் திருந்தது. இளந்தலைமுறைகளின் வாழ்வை சீரழிக்கக் கூடிய செயற் பாடுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப் படுகின்றன.

புலிகள் குடாநாட்டுக்குள் வந்த தும் சீரழிவுகள் யாவும் தடுக்கப்பட்டு விடும் என்று அனைவரும் நம்பியி ருந்தார்கள். முயன்று பார்த்தோம், முடியவில்லை. படைக்கட்டுப்பாட்டுக் குள் அதிகாரம் எங்களின் கைகளில் இல்லை. எங்களால் முடியவில்லை. அதற்காக நாம் ஒதுங்கி நிற்கவில்லை.

நாளாந்தம் பத்திரிகையில் குடா நாட்டின் கலாசார சீரழிவுகளை, சமூக சீர்கேடுகளைப் பார்த்து எமது தலை வர் வேதனைப்படுகிறார். எங்களை அழைத்து இயலுமானவரை கட்டுப் படுத்துங்கள் என்று கூறுகின்றார்.

இழப்புகளுக்கும் அர்ப்பணிப்புக் களுக்கும், மத்தியில் பெறப்படுகின்ற விடுதலை, சீர்கேடுகள் நிறைந்த சமு தாயத்தை உருவாக்குவதற்காக அல்ல.

எனவே, சமகாலத்திலே எமது சமுதாயத்தை சீரழிவுகளில் இருந்து பாதகாக்க வேண்டியதும் தேசிய எழுச் சிப் பேரவையின் கைகளிலேயே உள்ளது. அதற்கு புலிகளும் எமது தலைமையும் என்றைக்கும் பக்கபல மாகவே நிற்கும்.

- என்று தெரிவித்தார்.

## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.12

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை யொட்டி வடபிரதேச இந்துப் பேரவை நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக நிகழ்ச்சித் தொட ரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு 'சிவகதிதானே' என்னும் பொருளில் திருமதி சண்முகதாஸ் குணமணி சொற்பொழிவாற்றுவார்.

(எ-10-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.12

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை யொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் எஸ்.குமாரசாமி யின் பாட்டுக்கச்சேரி இடம்பெற வுள்ளது.

இதில் பக்க வாத்தியக்கலை ஞர்களாக வயலின் - ஏ.ஜெயராமன், மிருதங்கம் - கே.கண்ணதாசன், கெஞ்சிரா - கே.அனந்தகோபன், முகர் சிங் - கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-10)

★ ★ ★


யாழ்ப்பாணம்,ஓக.12

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை யொட்டி நல்லூர் சைவ மகா சபை யினால் நல்லூர் ஆலய மேற்கு வீதி யில் உள்ள ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய அரங்கில் இன்று தொடக்கம் எதிர் வரும் 28ஆம் திகதி வரை தினமும் மாலை 6 மணிக்கு தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நடத்தப்பட வுள்ளது.

இன்று மாலை 6 மணிக்கு பிரம் மஸ்ரீ சி.வை.நித்தியானந்தசர்மா 'தடாதகை' பற்றி இசைச் சொற் பொழிவாற்றவுள்ளார். (எ-10)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பத்தாம் திருவிழா (மஞ்சம்)



## மஞ்சத்தில் நீயிருக்க வேண்டும்

மஞ்சத்திலே நீயமர்ந்து வரவேணும்
அக்காட்சியை நாமெலாம் காணவேணும்
பக்தரின் குறைகளை திருச்செவியில் ஏற்க வேணும்
பின் அவர்களின் குறைகளைத் தீர்க்க வேணும்
எத்தனை நேர்த்திகள் உன் சந்நிதியில் – உன்
திருக்கண்ணைத் திறந்து பாருமையா
அவர்மனதில் இருக்கும் குறையெல்லாம் தீர்க்க வேணும்
எந்நாளும் மஞ்சத்தில் நீயிருக்க வேணும்.

சி.தவசீலன்
பெரியமாவடி.

## அழைத்து அருள்தருவாய் வேலவா!

*பல்லவி*

*கானமயிலேறி வானவலம் வருவாய் நாயகா–உனை*
*காணபக்தர் கோடி விழித்திருக்க (கானமயி....)*

*அனுபல்லவி*

*தேனமுதத் தென்றலே தெய்வமே யருள்வாய்*
*கானமிசை பொழியும் நல்லைப் பதியினிலே (கானமயி...)*

*சரணம்*

*குழைந்து குழைந்திதயம் குகனே யெனப்பாட*
*வளைந்திரு புறமும் வள்ளி தெய்வ யானையிருக்க*
*இளைத்திடுமென் கரங்கள் சென்னியில் கூப்பிட – எனை*
*அழைத்து அருள் தருவாய் வேலவா! (கானமயி...)*

- எம்.சுதேசிகன்.

## வரமொன்று தாராய்!

பொங்கும் அலையென அடியவர் கூடி
பொதிகையில் பிறந்த தமிழினிப் பாடி
எங்கும் உந்தன் நாமம் ஒலிக்க
எல்லோர் மேனியும் ஒருமுறை சிலிர்க்க
அஞ்சேலென யாவர்க்கும் அபயம் அளித்து
அடியவர் தம்மைக் காத்திட எண்ணி
மஞ்சத்தில் ஏறி வருகின்ற முருகா! இம்
மாநிலம் செழித்திட வரமொன்று தாராய்.

- எம்.எம்.குமார்.

## செய்வாய் நற்கருணை!

தெய்வானை வள்ளியொடு
சேர்ந்திருக்க மஞ்சத்தைக்
கைவாறாய் மெய்யடியார்
கைதொடுத்து இழுத்துவர
உய்வாறு உன்கருணை
உவப்போடு தந்தெமக்கு(ச்)
செய்வாய்நற் கதியென்று
சிரங்குவித்தோம் நல்லூரா!

முருகனடியான்.

## நல்லூரிலே திரு உலா

"செங்கோலோச்சித் தமிழ் மன்னன் ஆண்ட
கந்தபுராணக் கலாசாரம் மிளிரும்
நல்லைநற்பதியில் கோவில் கொண்ட
கந்தன் வண்ணமயில் ஏறியே திரு உலா"

"தினமும் வந்து தனை நாடித் தொழுது
சூழ்ந்து காவடிகள் பலவும் ஏற்றி
மனமுருகிப் பண்பாடித் துதிப்பார்க்கு
முருகன் நின்று அருள் பொழியும் திரு உலா"

"இன்னல்கள் பல உற்று ஓடோடி
உலகெங்கும் பரந்து செறிந்து வாழும்
எம்மண்ணை மறவாது கந்தன் நாமமோதும்
எம்மவர் வளம்பெற வீதி வலம் வரும் திரு உலா"

- நயினை விஜயன்.

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய சபையின் முன்னாள்
தலைவரும்
எமது பகுதியின் மூப்பருமாகிய
*அமரர் பாக்கியமுத்து மூப்பரின்*
அன்பு மனைவி
**திருமதி பா.லூட்ஸ் அன்னரஞ்சிதம்**
அவர்கள் 04-08-2003 அன்று நோர்வேயில் காலமாகியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* (21315)(21-14-17) *பரி. கார்மேல் மாதா சபை.*

# நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

**10ஆம் ஆண்டு** **3ஆம் ஆண்டு**





திருமதி
**அட்ஷயலிங்கம் சரஸ்வதிதேவி**

அமரர்
**வைரமுத்து அட்ஷயலிங்கம்**
(தபாலதிபர்)

18.05.1933 - மலர்வு - 19.05.1932
23.04.1993 - உதிர்வு - 17.07.2000

திதி: 12.08.2003 (ஆடிமாத அமரபக்கப் பிரதமை)

*தாயில் சிறந்த ஒரு கோயிலும் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரமும் இல்லை*
*ஏன் தரணியிலுமில்லை என்பதனை உங்கள் செயலால் நாமறிந்தோம்*
*கைம்மாறேதும் கருதாமல் கருமம் புரியும் களஞ்சியம் நீர்*
*கடல் சூழ் உலகில் கண்கண்ட தெய்வம் நீங்கள் இருவீரும்*
*உயிரினோடும் உணர்வினோடும் உடலினோடும் உறவாடும்*
*உத்தமராக விளங்கி எமை உயரவைத்தீர் உலகத்தில்*
*எமைநீர் விட்டே ஏகிடினும் உங்கள் உருவம் மனத்திலிருக்கும்.*
இறைவன் அடியில் உம் ஆத்மா இன்பம்பெற நாம் இறைஞ்சுகின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(21-26-14-17)

*"அட்ஷயபவன்", கல்லடி,*
*தும்பளை வீதி,பருத்தித்துறை.* (சி-29439)

உங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கணிதபாட விசேட செயற்திட்டத்தின் கீழ் தரம் 11 வகுப்புகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் கற்கும் மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-86)

# அறிவித்தல்

ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் சார்பில் உரும்பிராய் வடக்கில் இயங்கிவந்த


**சிறுவர் பராமரிப்பு நிலையம்**

09-08-2003 சனிக்கிழமை தொடக்கம் ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் இயங்குகின்றது என்பதை அறியத் தருகிறோம்.

(சி-29434) (21-14-17) - மேற்படி தேவஸ்தானம்.

# முதலாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

தோற்றம் 16 - 02 - 1925



மறைவு 24 - 07 - 2002

# அமரர் மார்க்கண்டு நாகரத்தினம்

(உரிமையாளர், நாகரத்தினம் & கோ, யாழ்., பங்காளர்,
BRITISH LIGHT LANKA PVT LTD. (TENBY) COLOMBO)

திதி: 12-08-2003

**அன்பும் பண்பும் மிக்க எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய ஊரெழு கற்பக விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.**

*62/22, அல்விஸ் பிளேஸ்,*
*கொட்டாஞ்சேனை,*
*கொழும்பு -13.* (சி-29447) (21-14-19-17)

*அன்பு மனைவி, மக்கள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
ஊரெழு மேற்கு, சுன்னாகம்.





சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.

பிள்ளைகள் வளர்ந்த பிறகு அவர்களது விளையாட்டுப் பொருட்களுக்கு ஏற்படும் நிலை போல, சமாதானமும் கவனிப்பாரற்றதாகி விடுமா? சமாதானத்தின் செழுமையை இன்று நம்பிள்ளைகள் அனுபவித்து மகிழ்கின்றனர். அவர்களை மீண்டும் இருள் சூழ்ந்த வாழ்வில் வீழ வைப்பது சரியா? அவர்களின் நிரந்தர சமாதானக் கனவை கலைப்பது முறையா? சமாதானத்தை தங்கு தடையின்றி முன்னெடுப்போம். இது நம் கடமை.

Save the Children
in Sri Lanka

Grant McCann

# பாராட்டி வாழ்த்துகிறோம்



சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
A/L 2003 கலைப்பிரிவு மாணவி
செல்வி
**தர்மினி அரசநாயகம்**
அவர்கள் 3A பெற்று
யாழ்.மாவட்ட ரீதியில் முதலாவது
இடமும் தேசிய ரீதியில் 51ஆவது
இடமும் பெற்றுள்ளார். இவரை
பல்கலையும் கற்று கல்வியால்
சிறப்புற பாராட்டி வாழ்த்தும்

அன்புச் சகோதரர்கள்,
நண்பர்கள்.

(21325) (29-16-18)

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரிய
**திருமதி சண்முகராசா கைலாசபதி**
**(கைலாசம் அக்கா)**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த
கவலையடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் அன்னாரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பவர்கள்
ப.கிருஷ்ணமூர்த்தி குடும்பம்

மூர்த்தி விளம்பர சேவை
(தேவி அச்சக ஒழுங்கை)
யாழ்ப்பாணம்
போன்:278

(C/29462) (29)


# சிங்கப்பூர் சுற்றுலா

## இனிமையான 3 இரவுகள்

**யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாகச் சிங்கப்பூர் உல்லாசப் பயணம்**

1. ஒகஸ்ட் 31.2003 - 17.45 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் எக்ஸ்போ எயர்- விமானம் ஏறுதல்.
   18.45 மணிக்கு இரத்மலானை விமான நிலையம் சந்தித்து சொகுசு பேருந்து மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு செல்லல்.
2. செப்ரெம்பர் 1.2003-SQ 401 விமான சேவை மூலம் சிங்கப்பூர் பயணம் - 01.35 மணி.

- மூன்று நாள்கள் இலவச காலை உணவு
- SUMMERVIEW HOTEL இலவச தங்குமிட வசதி.
  தனி அறை - பகிர வேண்டும் (இருவர்/மூவர்)
- சிங்கப்பூர் விமான நிலையம் - ஹோட்டல் - சிங்கப்பூர் விமான நிலையம் இலவசப் போக்குவரத்து -
- SIN TICKET TAX AND INSURANCE SURCHARGE of RS. 2200/= for PERSON
  இது கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*சிங்கப்பூரில்*

சுற்றுலா வசதிகள் - (உங்களது செலவு)

**SENTOSA TOUR** - பஸ் பயணம் - அரை நாள் ரூபா 3310/= (ஒருவருக்கு)
**NIGHT SAFARI** - பிற்பகல் - ரூபா 2320/= (ஒருவருக்கு)
**BIRDS OF PARADISE** - அரை நாள் - ரூபா 1450/= (ஒருவருக்கு)
மேற்கூறியவற்றை விட இன்னும் பல வசதிகள் உள்ளன.
மேற்கூறிய விலைகள் மாற்றத்திற்குரியன.

*பிரயாணக்கட்டணம்*

தனியொருவர் - ரூபா 45,750
சிறுவர் - ரூபா 30,000 (தனிப்படுக்கை இல்லை)
ரூபா 37,250 (தனிப்படுக்கை)

*இனி ஏன் தயக்கம்?*

சகல விவரங்களுக்கும் உடனேதொடர்பு கொள்ளவும்.

COSMOS MARKETING SERVICES
200,K.K.S. ROAD,
JAFFNA.
T.P.:222 - 5461
(முகவர்- SHAIBLY - MANAGER - HOLIDAY SHOP)

(சி-29454)


## பாலர் கல்விக்கழக விளையாட்டு விழா

பாலர் கல்விக் கழகப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் கலந்துகொள்கிறார். (ஒ-9)

## ஆசிரியர்சங்க ஆட்சிமன்றக் கூட்டம் ஒத்திவைப்பு

எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் யாழ்மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினரின் ஆட்சிமன்றக் கூட்டம், தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டம் நடைபெறும் இடமும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (ஒ-9)

## வீதி பலத்த சேதம்

யாழ்ப்பாணம்,ஓக.12

வெற்றிலைக்கேணி பாடசாலைக்கு முன்பாகவுள்ள வீதி, தாளையடி - சுண்டிக்குளம் வீதி ஆகியன மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

பாடசாலை செல்லும் மாணவர்கள், கடற்றொழிலாளர்கள் இதனால் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகக் கூறப்பட்டது.

(எ-)


**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
**A/L DAY CLASS**
**கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.**
யாழ்.நகர் ஆசிரியர் குழு

பொருளியல் : வரதராஜன்
வர்த்தகம் : பசில்
கணக்கியல் : சயந்தன், யூட்
வணிகப் புள்ளி விவரவியல்: தவசேகர்
தமிழ் : தர்மராஜா
இந்து நாகரிகம் : பத்மராஜா
அளவையியல் : ரணேஸ்சன்
புவியியல் : கிரிதரன்
நாடகமும் அரங்கியலும் : லக்சி
ஆங்கிலம் : ஜெயக்குமார்

Note:-
1) கணக்கீடு வாரத்தில் ஐந்து நாள்கள் நடைபெறும்.
2) 2004, 2005 A/L வணிகப் புள்ளிவிவரவியல் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.
3) G.A.Q.,B.A. புதிய பிரிவுகள் ஆரம்பம்.
தென்மராட்சி, வன்னி மாணவர்களுக்கு விசேட இடஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

(C/29460) (22) - நிர்வாகி.

**SUBRA(14)**
சித்தன்கேணி
**A/L DAY CLASS**
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்:15.08.2003
காலை 7.30 மணி
★ எமது வழமையான ஆசிரியர் குழு.
★ வாரத்தில் 18 மணி நேர வகுப்புக்கள்
★ மாதாந்தம் பயிற்சிப் பரீட்சை.
★ கடந்தகாலப் பெறுபேறே எமது திறமை.
(C-29452)(12-)

**CHEMISTRY**
**CENTRE**
Temple Road, நல்லூர்.
**A/L 2005**
GENERAL CHEMISTRY
இன்று 12.08.2003
ஆரம்பம்:3-4p.m.
Tue.,Thu.3-4
வெப்ப இரசாயனம்
ஆரம்பம்:13.08.2003
(புதன்) 3-4p.m.
அத்துடன் Basic மீட்டலும் நடைபெறும்.
By:அன்பழகன்.
(C-29456)(12-)

**லஷ்சுமி சினிமா**
இணுவில்



ரம்யாகிருஷ்ணன்,
லிவிங்ஸ்டன், மூர்த்தி
ஆகியோர் நடித்த
அன்னை காளிகாம்பாள் (ரீல்ஸ்)
சிறுவர்கள், பெரியோர்கள் குடும்பத்துடன் பார்க்கக் கூடிய படம். 11.00, 3.00, 7.00 (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சரோஜா திரைப்படம் மூலம்
திரையுலகத்திற்கு அறிமுகமாகிய
நித்தியவாணி நடித்த
சின்ன தேவதை
(தமிழ்) (ரீல்ஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(31-16-17) (C29232)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
அஜித், சிம்ரன் நடித்த -
வாலி
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
BLUE STREAK
தினசரி 8.45 இற்கு.
(C29213) (31-16-17)

**ராஜா** யாழ்ப்பாணம்
16.08.2003 வரை
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
பிரியமான தோழி
மாதவன்,
ஜோதிகா நடித்த (ரீல்ஸ்)
தினசரி: 10.30,2.30,6.30.9.30
(C29233) (31-16-17)

**லிபேட்டி** அச்சுவேலி
சரத்குமார். சிம்ரன். வையாபுரி.
மணிவண்ணன் நடித்த
அரசு (ரீல்ஸ்)
தினசரி: 3.00. 7.00 (பு.நேரம்)
காலை 11.00 JUDGE AND JURY
(C/29373) (31-16-17)


# மரண அறிவித்தல்கள்

## வினாயகலிங்கம் நெல்லைலிங்கம்

(முன்னாள் பொறியியலாளர் - மகாவலி அபிவிருத்திச்சபை)

இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட வினாயகலிங்கம் நெலலைலிங்கம் (முன்னாள் பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச்சபை) அவர்கள் நேற்று (11.08.2003) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாயகலிங்கம் - சோதியம்மா தம்பதிகளின் புத்திரனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் சகுந்தலா, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பிரபாகரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எல்லன்குளம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன்,*
*உடுப்பிட்டி.*
(21313) (29-16-18)
தகவல்:
நெ.சோதிலிங்கம் (மகன்)

## திருமதி கைலாசபதி சண்முகராசா (கைலாசம் அக்கா)

நல்லூர், முத்திரைச் சந்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்.கில்னர் லேனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கைலாசபதி சண்முகராசா நேற்று (11.08. 2003) திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.ஜெகதீஸ்வரராஜா,
S.விஜயேந்திரா, S.இந்திரகுமார்
(உமா ஸ்ரோர்ஸ், யாழ்.சிவன் கோயிலடி) மகன்மார்கள்.

*187/8,கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.*
(C/29459) (29-18-16)

## கதிரிப்பிள்ளை சின்னத்துரை (பெரிய சின்னண்ணை)

மயிலங்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை மேற்கு, விளிசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை சின்னத்துரை 10-08-2003 ஞாயிற்றுக்கிழமை ஏழாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளையின் மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் பாலச்சந்திரன (யா/தமிழ் கந்தையா வித்தியாலயம்), புஸ்பராணி (கொழும்பு), விமலராணி (கொழும்பு), பாலேஸ்வரி, சிவகுருநாதன் (லண்டன்), காலஞ்சென்ற சிவகடாட்சம் மற்றும் வாசுகி (ஓமான்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமலர்ச்செல்வி, சோமசுந்தரம், சுப்பிரமணியம், கேதீஸ்வரன், லதா (U.K), ஸ்ரீராமச்சந்திரன (ஓமான்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜனனி (U.K), கிருஸ்ணகுமார் (U.K), அமிலன், ரமணன், மதி, யுகன், கோபி, விதுஸன், லஜி (நெதர்லாந்து), தர்ஷா, சிந்து, கண்ணன், வேணு, மிதுன் (U.K), மேகவி (U.K) ஆகியோரின் பேரனும் அஜித் (U.K) இன் பூட்டனும் சின்னத்தங்கம், பொன்னம்பலம், செல்லம், செல்லலட்சுமி, அமரர்களாகிய அருளம்பலம், செல்லமுத்து, சுப்பிரமணியம், சுந்தரம், செல்லத்துரை, செல்வராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13-08-2003) புதன்கிழமை (மு.ப. 10மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

*புகையிரத நிலைய அருகில்,*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*
(21321) (29)
தகவல்:
சி.பாலச்சந்திரன்(மகன்).

## சதாசிவம் இராசதுரை

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், சங்குவேலிதெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இராசதுரை நேற்று (11-08-2003) அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் மகிழ்மலரின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன், நிரோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் நந்தினியின் (கனடா) அன்பு மாமனாரும் பிரவீனின் (கனடா) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-08-2003) செவ்வாய்க் கிழமை பி.ப 4.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி - தெற்கு*
*மானிப்பாய்*
தகவல்:
மகிழ்மலர்(தேவி)
(மனைவி)

# ஐன்ஸ்டீன் அறிவாலயத்தினரின் வாழ்த்துக்கள்



மேற்படி எமது நிறுவனத்தில் கல்விகற்று 2003 ஆம் ஆண்டு
க.பொ.த. உயர்தரம் கணிதப் பிரிவில் தோற்றி 3A பெறுபேற்றைப்
பெற்று மாவட்ட நிலையில் 2ஆம் இடத்தையும்
அகில இலங்கை ரீதியில் 8ஆம் இடத்தையும் பெற்று
எமது நிறுவனத்திற்குப் புகழ் சேர்த்தமைக்காக
**ஸ்ரீ.சசியந்தன்**
அவர்களை மேலும் பல சிறப்புகள் பெற்றுப் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.




*G.P.S. வீதி,*
*கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*

ஐன்ஸ்டீன் அறிவாலய
ஆசிரியர்கள், மாணவர்கள்.

# இலங்கைப் பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தியில், தாம் சீனாவுக்கு நான்காவது தடவையாக விஜயம் மேற்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

"மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸவுடன் 1988ஆம் ஆண்டு இங்கு வந்திருந்தேன். அப்போது பார்த்த சீனாவுக்கும் இப்போது காணும் சீனாவுக்கும் வித்தியாசம் உண்டு. நவீன சீனாவை இன்று காண்கிறேன்."

"எமது இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறுபட்ட துறைகளில் உறவுகளை மேம்படுத்தவேண்டும்" என்றார் அவர்.

சீனப் பிரமருக்கும் இலங்கைப் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமாலை 5.15 முதல் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

இலங்கைக்கு எதிர்காலத்தில் வழங்கவேண்டிய உதவிகள் குறித்தும் -

இலங்கையில் தொடரும் சமாதான முயற்சிகள் குறித்தும் - இப்பேச்சுக்களில் கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பேச்சுக்களை அடுத்து இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

அதைத் தொடர்ந்து இலங்கைப் பிரதமருக்கும் அவரது குழுவினருக்கும் இராப்போசன விருந்து அளிக்கப்பட்டது.

இன்று காலை 9 மணிக்கு சீனாவின் விவசாய அமைச்சர் டி.யு.கியுங்கிளினை இலங்கைப் பிரதமர் சந்திப்பார்.

அதன் பின் காலை 9.45க்கு சீன வர்த்தகப் பிரதி அமைச்சரை அவர் சந்தித்து உரையாடுவார்.

நண்பகல் சீன ஜனாதிபதி ஜூ ஜிண்டோவைப் பிரதமர் ரணில் சந்தித்து உரையாடுவார். அதன் பின்னர் மாலை 6 மணிக்கு செய்தியாளர் மாநாடு ஒன்றை பிரதமர் நடத்துவார். நாளை புதன்கிழமை காலை 8.25க்கு அவர் விமானம் மூலம் கொழும்பு நோக்கிப் புறப்படுவார்.

# விவாதப் போட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேள்வி" என்ற விவாதப்போட்டியில் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியுடனான இறுதிப்போட்டியில் வெற்றிபெற்றே யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் த.முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கௌரவ அதிதியாக வவுனியா - மன்னார் மாவட்ட நீதிபதி இளஞ்செழியன் கலந்துகொண்டார்.

இறுதி விவாதப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரின் சார்பில் விவாதிகளாக கே.சுகாஷ், ஆர்.ஜி.றுஜீவ்சன், ஜே.பி.ஏ.ரஞ்சித்குமார், பி.சேயோன் ஆகியோரும், நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் சார்பில் ரி.அதிஷ்டப்பிரதா, எஸ்.ரம்யா, ஆர்.அபிராமி, சி.காஞ்சனா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விவாதச் சுற்றுப்போட்டியின் சிறந்த விவாதியாக கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த அன்பு வதனியும், இறுதிச் சுற்றுப் போட்டியின் சிறந்த விவாதியாக நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.அதிஷ்டப்பிரதாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இச்சுற்றுப்போட்டியின் மூன்றாம் இடத்தை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 50இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தான முயற்சிகளின் முன்நகர்வு ஆகிய விடயங்கள் தொடர்பாக இப்பேச்சின் போது ஆராயப்பட்டதாகவும் - போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கின் அபிவிருத்திப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் வன்னிச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-9-164)

## ஜீ.சி.ஈ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் த.பவானந்த், நா.சிவாகரன் ஆகியோர் கணிதப் பிரிவில் 3ஏ சித்தியுடன் மாவட்ட மட்டத்தில் முறையே மூன்றாம், ஐந்தாம் நிலைகளில் உள்ளனர். இதேபாடசாலையில் வர்த்தகப் பிரிவு மாணவர்கள் கி.பிரதீபன், பு.பிரேம்காந்த் ஆகியோர் 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முறையே முதலாம், மூன்றாம் நிலைகளில் உள்ளனர். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி கலைப்பிரிவு மாணவி அரசநாயகம் தர்மினி 3ஏ சித்திபெற்று மாவட்டத்தில் முதல் நிலைபெற்றுள்ளார்.

(ஒ-9-12-ரி)

## நைஜீரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நைஜீரியாவிலிருந்து உள்நாட்டுப் போர் காரணமாக இலங்கை வந்த இந்த யுவதிகள் தென்னிலங்கையில் தங்கியிருந்ததாகவும் -

அப்போது பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மீரிகம தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்ததாகவும் - அங்கிருந்து தப்பி மன்னார் வந்தபோதே மீண்டும் நேற்று இரு யுவதிகளும் கைது செய்யப்பட்டதாகவும் - பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டது. பதில் நீதிவான் ஏ.எஸ்.ஜோதிலிங்கம் மீண்டும் மீரிகம தடுப்பு முகாமில் நைஜீரிய யுவதிகள் இருவரையும் தங்கவைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதை மீள அமைக்கப்படும். வேறு பல புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும். இலங்கையில் ரயில்வே சேவையில் கூடுதல் வருமானத்தை அரசுக்கு யாழ். - கொழும்பு சேவையே கடந்த காலத்தில் வழங்கி வந்தது. கடந்த 10 வருடத்துக்கு மேலாக யுத்தம் காரணமாக அந்தப்பாதை அழிந்துள்ளது - என்றார் பிரதமர்.

சீன அரசுடன் மூன்று ஒப்பந்தங்களில் பிரதமர் ரணில் நேற்று மாலை கைச்சாத்திடவிருந்தார்.

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். விஜயத்தைக் கண்டித்து 'ஈழத்தமிழின மாணவர் மன்றம்' என்ற அமைப்பு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தது. இதே சமயம், பொதுமக்களின் எதிர்ப்பை எதிர்நோக்க நேரிடலாம் என்பதாலேயே யாழ். செயலகத்துக்கு செல்வதையும் உள்துறை அமைச்சர் தவிர்த்ததாகக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையிலேயே காணி அமைச்சரின் நேற்றைய யாழ். விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

காணி அமைச்சரும் அவரது குழுவினரும் நேற்றுக் காலை யாழ். வருவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டு விழா, தேசிய விளையாட்டு விழா ஆகியவை தொடர்பாக யாழ். செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெறவிருந்த கலந்துரையாடலில் அமைச்சர் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

யாழ். அரச அதிபர், பிரதேச செயலர்கள், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காக நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் சமுகமளித்திருந்தனர். எனினும் அமைச்சர் ராஜித சேனரட்ண யாழ். வரமாட்டார் என்பது பின்னர்தான் அவர்களுக்குத் தெரியவந்தது.(ஒ-8)

## வெளிநாட்டவர் கைது!

இலங்கையில் இருந்து இத்தாலிக்கு ஆள்களைச் சட்டவிரோதமாக அனுப்பும் குழுவைச் சேர்ந்த இரு முக்கிய சந்தேகநபர்கள் குற்றப் புலனாய்வுப் பொலீஸாரினால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர். ஒரு இந்தியரும் ஒரு பாகிஸ்தானியருமான இவ்விருவரும் கல்கிசையில் வீடொன்றில் ஒளித்திருக்கையிலேயே பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

## குரங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புலிகளின் தூதுக்குழுவின் பிரான்ஸ் விஜயம் குறித்து இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற கணகாணிப்புக்குழு விடுத்த கோரிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்திருப்பது குறித்து கண்காணிப்புகுழுத் தலைவர் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவரிடம் அறிவித்திருந்தார். அதனையடுத்தே எரிக்சொல்ஹெய்ம் இன்று இலங்கை வருகிறார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குறித்து அரசு சமர்ப்பித்திருக்கும் வரைவை ஆராய்வதில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள், தமது ஆலோசனையை வெளிநாட்டிலும் மேற்கொள்ளவிருக்கின்றனர். இதற்கென புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான ஒரு குழுவினர் பிரான்ஸ் செல்லத் திட்டமிட்டிருக்கின்றனர்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு

★ தித்திக்குதே

விஸ்ணு வீடியோ
கோண்டாவில்.
(0777-261416)

சோலை வீடியோ
பிரதான வீதி, நெல்லியடி.
பிரதிகள் உடன் பெறலாம்.

TVS பாவனையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

அறிமுகம் F2

நாளை (13.08.2003) புதன்கிழமை TVS நிறுவனத்தினர்
உங்கள் TVS மோட்டார் சைக்கிள்களை
இலவசமாகப் பரிசோதிப்பதற்கு இந்தியா, கொழும்பில்
இருந்து வருகைதரவுள்ளனர்.

முன்கூட்டியே
உங்கள் பெயர்களை
பதிவு செய்து கொள்ளுங்கள்



பதிவு செய்யும் இடம்:
இரட்ணம்ஸ் சேவைத்தளம்
இல. 30, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.

சுசுக்கி ரேடர்ஸ் TVS
59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
TVS LANKA PRIVATE LTD இன்
அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ். முகவர்
0777-340056/222-6185

(C/29436) (22-11-16)

TVS வாடிக்கையாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!



TVS



எமது ஸ்தாபனத்திற்கு இந்தியாவிலிருந்தும் கொழும்பிலிருந்தும் TVS மோட்டார் சைக்கிள் கம்பனியின் பிரமுகர்களும் பரிசோதகர்களும் வருகை தர இருப்பதனால்,

எமது வாடிக்கையாளரின் நலன்கருதி 12.08.2003 செவ்வாய்க்கிழமை TVS மோட்டார் சைக்கிள் இலவச பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம் எமது நிறுவனத்தால் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மைதானத்தில் காலை 9 மணி தொடக்கம் 5 மணிவரை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஆகையால் TVS மோட்டார் சைக்கிள் வைத்திருக்கும் அனைவரும் எமது ஸ்தாபனத்தில் அதற்கான பதிவுகள் மேற்கொள்ள இருப்பதனால் உங்கள் பதிவிற்கு முந்துங்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

TVS LANKA (PVT) LTD. இன்
அங்கீகாரம் பெற்ற யாழ்.
TVS மோட்டார் சைக்கிள் விற்பனை முகவர்

யசோ மோட்டார்ஸ்
163, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 222 2544.

(சி-29420) (31-14-16)

வேலை வாய்ப்பு

ஏலிம் சிறுவர் இல்லத்தில் பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

1. ஆண் பிள்ளைகள் பராமரிப்பாளர் - (ஆண்/பெண்)
(வயது 45 முதல் 55 வரை)
2. பெண் பிள்ளைகள் பராமரிப்பாளர் - (பெண்)
(வயது 40 முதல் 55 வரை)
3. சமையலாளர் - (ஆண்)
(வயது 45 - 55 வயதுவரை)

பின்வரும் முகவரிக்கு 15.08.2003 ஆம் திகதிக்கு முன்னர் உற வினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழுடன் நேரில் சமர்ப்பிக்கவும்.

மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய்.
(21272) (29-16-17-16-14)

முகாமையாளர்,
ஏலிம் சிறுவர் இல்லம்.

இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு
வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077 6080660, 077-6146499, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(28-14-17) (21048)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு அசுபதி

இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன்கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட கதிரவேலு அசுவதி அவர்கள் நேற்று (11.08.2003) திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முதலித்தம்பி - சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் - ராமாசிப்பிள்ளையின் மருமகளும் அருட்சோதி (லண்டன்), புனிதவதி(பிரான்ஸ்), ஆனந்தசோதி, உதயசோதி, ஜெகதீஸ்வரி, அருளேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரசாமி(பிரதேச சபை, சுழிபுரம்), ரஜனி(லண்டன்), சண்முகேஸ்வரி, விக்கினேஸ்வரி, சிவானந்தம் (பிரான்ஸ்), தயானந்தன்(பிரதேச சபை, நல்லூர்) ஆகியோரின் மாமியாரும் ஞானபூரணம், ராசதுரை, அன்னம்மா, குமாரலிங்கம், ஞானம்மா, சிவபாக்கியம், கைலாயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.08.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
காரைக்கால் சிவன்கோயிலடி.
(22-16-18)

தகவல்:
பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.